JL 1
5m211 25
N215.1.3
210146

எது உயர்ந்தது.

பொதுவில் வைத்தியமுறைகளை நான்கு பிரிவுகளாகப்பிரிக்கலாம். (1) மருந்துகள் (2) அவற்றின் செய்பாகம் (3) வியாதிகளை அறியும் வகை (4) பதார்த்தகுணங்கள். எந்தமுறைகளிலும் இந்நான்கு பாகங்களும் விவரமாக சொல்லப்படவேண்டும். அம்முறையைகையாளும் வைத்தியர்களும் இந்நான்கு விஷயங்களையும் சரிவர உணர்ந்தே சிகித்சை செய்யப்புகவேண்டும். இந்நான்கில் ஒன்று குறைவுபடினும் அவன் வைத்தியனுகான். இது சுதேச வைத்திய முறைக்குமாத்திரம்என்றும் மற்றமுறைகளுக்கு அவசியமில்லையென யாரும் கூறமுடியாது. இவற்றுள் மருந்துகள்என்னும் முதல்பிரிவை ஆலோசிப்போம். சுதேசவைத்திய முறைப்படி தயாரிக்கப்படும் மருந்துகளுக்கும் ஆங்கிலமுறைப்படி தயாரிக்கப்படும் மருந்துகளுக்கும் வித்தியாசத்தையும் கவனிப்போம். சுதேசவைத்திய முறைகளில் ஆங்கில முறையில்போல பற்பல மூலிகைகளிலிருந்தும், மரங்களின்பட்டைகளிலிருந்தும், உப்புகளைசேகரிக்கும்விதம் நன்றுகசொல்லப்பட்டிருக்கிறது. இப்படி சேகரிக்கப்படும் உப்புகளுக்கு "க்ஷாரம்" எனப்பெயர் கொடுக்கப்பட்டிருக்கின்றது. ஆங்கில வைத்தியத்தில் தற்காலம் வெகுவாக உபயோகிக்கப்படும் "சோடாவுப்பு" என்பது நமது சுதேசவைத்திய முறையில் வெகு வெகு காலமாக கையாளப்பட்ட "சத்தி க்ஷாரமே." இதுதவிர பூமியிலிருந்து தோண்டியெடுக்கப்பட்ட உப்புகள் பல சுதேசமுறைகளில் உபயோகிக்கப்படுகின்றன. அந்த உப்புகள் பலவற்றிற்கு இன்னும் ஆங்கிலத்தில் பெயர் கூட ஏற்படவில்லை. மூலிகைகள், வேர்கள், பட்டைகள், கடை சரக்குகள் முதலியவைகளிலிருந்து ஆங்கிலத்தில் extract என்று அழைக்கப்படும் திராவகசத்துகள் எடுக்கும்விதத்தையும் பலவிதமாக நமது முன்னோர்கள் கூறியிருக்கின்றனர். ஆங்கிலத்தில் decoction என்று அழைக்கப்படும் பற்பல கிஷாயவகைகள், பலசூர்ணங்கள் (powder) லேகியங்கள் ஆகியவைகளும் சொல்லப்பட்டிருக்கின்றன. இரும்பு முதலிய உலோகங்கள் முழுவதற்கும் சுத்திசெய்யும் விதமும் பஸ்ம சிந்தூரங்கள்செய்யும் விதமும் பலவிதமாக வர்ணிக்கப்பட்டிருக்கின்றன, ஆங்கிலத்தில் முக்கியமாக சில உப்புகளும், சில திராவகமும் பெரும்பான்மையான வியாதிகளுக்கு உபயோகப்படுத்தப்படுகின்

றன. சுதேசமுறைகளில் திராவகம் விரிவாக சொல்லப்பட்டாலும் அவற்றை விட decoction என்ற கிஷாயவகைகள் முக்கியமாக உபயோகப்படுகின்றன. ஆங்கில முறையில் மருந்து சாமான்கள் நமது தேசத்தில் கிடைக்காததாலும் அம்முறை பயின்றவர்களுக்கு அனுகூலமாக திராவகசத்துகள் வெளிதேசத்தில் தயாரிக்கப்பட்டு அனுப்பப்படுகின்றன. தூரதேசத்திலிருந்து சரக்குகளாக வருவதைவிட சத்துகளாகவருவது அனுகூலமாகவுமிருக்கிறது. உதாரணமாக சுக்கை எடுத்துக்கொள்வோம். ஒருபலம் சுக்கையிடித்து கிஷாயம் செய்தும் ஒருபலம் சுக்கைப்போட்டு திராவகம் இறக்கியும் வியாதிகளுக்கு தனித்தனி கொடுத்துப்பார்த்தால் எது சீக்கிரத்தில் உடம்பில் பற்றுகிறதென்பது எல்லாரும் அறியக்கூடியதே. சில அவசரவியாதிகளுக்கு கிஷாயம் தயாராகிவருமளவு தாமதிக்ககூடாதகாரணம்பற்றி திராவகவகைஉபயோகிக்கப்படினும் உண்மையில் அவ்வப்பொழுது புதிய சரக்குகளைக்கொண்டு தயார்செய்யப்படும் கிஷாயங்களே உண்மையில் நல்ல பலன் அளிக்கக்கூடியதென்பதை பலகாலும் அனுபவத்தில் அறிந்திருக்கிறோம். சுதேச முறைகளில் வியாதிகளுக்கு ஏக மூலிகையால் மருந்தும் பல மூலிகைகளால் செய்யப்படும் மருந்துகளும் சொல்லப்பட்டிருக்கின்றன. சில வியாதிகளின் நிலைமைக்குத் தக்கவிதமாக சரக்குகளை கூட்டியும் குறைத்தும்கொள்ளவேண்டியது வைத்தியனின் கடமை. பல மூலிகைகளால் செய்யப்படும் கிஷாயம் முதலிய மருந்துகள் மிகுந்த வேகமுள்ளவைகளாகக் காணப்படுகின்றன. ஒரே குணமுள்ள பல சரக்குகளைசேர்த்து உபயோகிப்பதால் மருந்தின் வேகம் அதிகப்படுகின்றது. ஒரு மருந்துக்கு வேகத்தை அதிகரிக்க சில ஸம்ஸ்காரங்கள் ஹோமோபதி என்ற முறையிலும் செய்யப்படுகின்றன. ஆகையால் பல சரக்குகளைசேர்த்து மருந்து செய்வதென்ற பாகத்தை விவரமறியாது சிலர் தூஷித்தனர். சரீரத்தில் ரத்த புஷ்டியுண்டாக்க முட்டை, மாமிசம்போன்ற வஸ்துக்களல்லாது வேறு மருந்து ஆங்கில முறையிலேயே கிடையாது. மாடு ஆடு முதலிய மிருகங்களின் மாமிசத்தை திராவக ரூபமாக்கி சீசாவிலடைத்து வெளிநாடுகளிலிருந்து வருவதுதான் ரத்தபுஷ்டி மருந்தாக ஆங்கில முறையில் உபயோகிக்கப்படுகின்றது. இதைவிட நாமே ஷை மாமிசங்களிலிருந்து பிரதிதினம் புதிதாகதயார்செய்து உபயோகிப்பது நலம். ஆனால் அது தயாரிக்கும் விதம் நமது ஆங்கில வைத்திய சகோதரர்களுக்குத் தெரியாததால் அவர்கள் அவ்வழியை கைப்பற்றமுடியவில்லை. இளைத்த சரீரம் பெருக்க காட்ஸ்லிவர் ஆயில் என்பது வெகு சாதாரணமாக ஆங்கிலத்தில் உபயோகப்படுத்த

“வைத்திய சந்திரிகா.”

ஆயுர்வேத சாஸ்திரத்தில் உண்மைப் பெருமையையும், அதன் ஆராய்ச்சியினால் மனிதசமூகத்திற்கு ஏற்படக்கூடிய பிரயோஜனத்தையும் தெளிவாக எடுத்து விளக்குவதற்கே நமது மாஸிகை வெளிவருகிறது. ஆயுர்வேத சாஸ்திரத்தில் பூர்ண பாண்டித்தியம் வாய்ந்த எமது ஆசிரியரும், மற்றும் பழைய முறையில் பயிற்சியுடையவர்களும் எழுதிவரும் விஷயங்கள் பண்டிதருக்கும், பாமரருக்கும் நல் விருந்தாக அமையும்.

வைத்திய சாஸ்திரத்தில் முக்கியமான பல புஸ்தகங்களின் மொழிப் பெயர்ப்பு நல்ல நடையில் வெளிவரும். வியாதிகளின் காரணம், குணம், சிகிச்சை முதலியவைகளை மூடமந்திரமில்லாமல் “வைத்திய சந்திரிகா” பிரதி மாதமும் தாங்கி வருவாள். வைத்திய முறைகளில் பயிற்சிபெற விரும்பும் மாணவர்க்கு ஒரு வைத்திய கலாசாலையைப்போல் நமது “சந்திரிகா” உதவுவாள்.

ஒருகாலத்தில் தனக்கு ஒப்பும், உயர்வும் இல்லாமலிருந்த நம் நாட்டு சிகிச்சா முறைகளின் பிரயோஜனத்தை எடுத்துக்காட்ட வெளிவரும் நமது பத்திரிகை தமிழ் மக்களின் முழு அநுதாபத்தையும் ஆதரவையும் எதிர்பார்க்கிறாள்.

வியாபாரிகளே! ஏன் நல்ல சரக்கை வைத்துக்கொண்டு ஏங்குகிறீர்கள். கடையில் சாமான்களை வைத்திருந்தால் வியாபாரம் விர்த்தியடையாது. உங்களிடம் உயர்ந்த சரக்கு இருப்பதை யார் அறிவார்கள்? தமிழ் நாடு முழுமையும் இன்னும் தமிழன் வசிக்குமெல்லா இடங்களுக்கும் செல்லும் “வைத்திய சந்திரிகா” வில் ஒரு முறை விளம்பரம் செய்துபாருங்கள். மேல் நாட்டாரின் வியாபார முன்னேற்றத்தின் இரகசியம், அவர்கள் செய்யும் “விளம்பர”மென்பது நம்மவரில் பலருக்கு இன்னும் தெரியாது.

வைத்தியர்களே! உங்கள் மருந்துகள் ஏராளமாய் விற்பனையாகவேண்டுமா? திறமையும், புகழும் நாளுக்குநாள் வளரவேண்டுமா? வைத்திய உலகத்தில் தனக்கு நிகரில்லாத தமிழ் மாஸிகையான இந்த பத்திரிகை மூலை, முடுக்குகளிலிருக்கும் ஆயுர்வேத ஞானி, சித்த வைத்தியசாலைகளையும், வைத்தியர்களின் கைகளையும் அலங்கரிக்கிறது. ஆகையால் ஒரு முறையாவது எங்கள் சஞ்சிகையில் விளம்பரம்செய்துபாருங்கள்.

காரியஸ்தர்,
“வைத்திய சந்திரிகா” கரூர்.

சந்தா விகிதம்.

வருஷ சந்தா :—		
	உள்நாட்டுக்கு	ரூ. 2.
	வெளிநாட்டு	„ 3.

விளம்பர விகிதம்.

மாதம் 1-க்கு	பக்கம் 1-க்கு	ரூ. 8.
„	„ ½-க்கு	ரூ. 4.
„	„ ¼-க்கு	ரூ. 2.

படுகிறது. இதுவும் ஓர்வித மீன்கொழுப்பு என்பது நாம் சொல்லத்தேவையில்லை. ஆகையால் சரீர இளைப்புக்கு மாமிச சம்பந்தமில்லாமல் வேறு மருந்து ஆங்கில முறையில் கிடையாதென்றே சொல்லலாம். உலோகங்களில் இரும்பை ரத்தபுஷ்டிக்காக உபயோகிக்கின்றனர். இரும்பை பலவிதமாக ௸ வியாதிக்கு உபயோகிக்கின்றனர். ஆனால் இரும்புசம்பந்தமான எந்த ஆங்கிலமருந்தும் குணம்குறைந்தும் துர்க்குணம்நிறைந்தும்காணப்படுகின்றது. ௸மருந்தை உபயோகித்த சுவல்பநாள்களில் மலபந்தம், வயிற்றுவலி முதலிய பலஹிம்சைகள் உதிக்கின்றன. இரும்பை உபயோகித்தால் ௸ தொந்திரவு உண்டாவது சகஜமென ஆங்கிலவைத்தியர்கள் சொல்லுகின்றனர். ஆனால் நமது பெரியோர்கள் இரும்பில் ௸ துர்குணங்கள் இருப்பதாகவும் அத்துர்க்குணங்களைவிலக்கவேண்டியது வைத்தியன்கடமையென்றும், அத்துர்க்குணங்களை நீக்காமல் உபயோகிப்பவன் மூடவைத்தியன் (quack) என்றும் சொல்லுகின்றனர். அதற்கிணங்க அயம் முதலிய உலோகங்களை அவைகளின் சுபாவதோஷம் நீங்கிவிட முதலில் பலவகையாக சுத்தி செய்து பிறகு பலவகை சாறுகளால் அவைகளை அரைத்து திட்டமாக சில புடங்கள்போட்டு நோயாளிகளுக்கு உபயோகிக்கின்றனர். அப்பொழுது ஆங்கிலமுறையில்போல கெடுதல்ஒன்றும் இல்லாமல் பூர்ண குணத்தை கொடுக்கின்றன. தவிர மேற்சொல்லியவிதம் புடம்போட்ட பஸ்ம சிந்தூரங்களை தேன் முதலியவைகளில் குழைத்து நாக்கில் தடவின மாத்திரத்தில் உடனே அவ்விடத்திலேயே (absorb) ரத்தத்தில் கலக்கவும் அனுகூலமாகின்றது. இதில் பிறவிதோஷம் விலகியிருப்பதால் மருந்தை நிமிஷம்கூட நிறுத்தாமல் மாதக்கணக்காக உபயோகிக்கலாம். இவ்விதமே ஈயம் முதலிய மற்ற உலோகங்களில் பிறவிதோஷம் பல விருப்பதால் அவைகளை விலக்க சுத்திசெய்யவேண்டியது அவசியமாகின்றது. ஆனால் ஆங்கில முறையில் எதற்கும் சுத்திசெய்வதென்ற வழியே நாளதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை. Mercury என்ற ரசம் பலவிதங்களாக சுதேசமுறைகளிலும் ஆங்கில முறையிலும் கையாளப்படுகின்றது. ஆனால் சுதேசமுறைகளில் ரசத்தை சுத்தப்படுத்தி பிறவிதோஷங்களை விலக்கி உபயோகிக்கின்றனர். ஆங்கில முறையில் ரசம் உடம்பில் பற்றியதற்கு அடையாளம் வாய்வெந்து புண்ணாகவேண்டுமென்கின்றார்கள். கந்தகத்தை சம்பந்தப்படுத்தினால் ரசத்தின் துர்குணம் விலகுமென்பதுகூட நாளதுவரை ஆங்கிலமுறையில் கண்டு பிடிக்கப்படவில்லை.

" பிரயோக: சமயேத் வியாதிம் யோந்யமந்யமுதீரயேத்
நாஸௌ விசுத்த: சுத்தஸ்து சமயேத் யோ ந கோபயேத் "

நோயாளிகளுக்கு ஔஷதம் கொடுத்தால் வியாதி தணியவேண்டும். ஒரு வியாதிக்காக உபயோகிக்கும் மருந்து மற்றொரு வியாதியை உண்டுபண்ணில் அது உயர்ந்த முறையல்ல. உபயோகிக்கும் ஔஷதம் வியாதியைத் தணித்துவருவதுடன் மற்றொரு வியாதியை உண்டுபண்ணாமலிருக்கவேண்டும். அதுதான் உயர்ந்த முறையென்று நமது பெரியோர்கள் கூறுகின்றனர். ஆங்கில முறையில் பெரும்பான்மையான ஔஷதங்கள் மற்றொரு வியாதியை உண்டுபண்ணாமலிருப்பதில்லை. ஆங்கில வைத்தியர்கள் பல ஔஷதங்களின் துர்க்குணங்களை reaction (கிளறிவிடுதல்) என்றபெயரைக்கொண்டு மறைக்கப்பார்க்கின்றனர். சுதேச வைத்தியர்கள் ஏதாவது தடுமாற்றத்தால் மருந்துகளை உபயோகித்து மேற்கண்ட அவஸ்தை நேரிடின் அப்பொழுது அவர்களை quacks (மூடவைத்தியர்) என்கின்றனர். வெள்ளைப் பாஷாணம் (arsenic) தாளகம் (yellow arsenic) முதலிய பாஷாண சரக்குகள் சுதேசமுறைகளில் வெகுவாக உபயோகப்படுகின்றன. முதலில் அவைகளைத் தகுந்தவிதம் சுத்திசெய்து இயற்கை துர்க்குணங்களைமாற்றி கஜபுடம்போட்டு பிறகு உபயோகிக்கப்படுகின்றது. இவ்விதம் தயார்செய்யப்படும் ஔஷதங்கள் மாதக்கணக்கில் அருந்தியும் துர்க்குணமில்லாமலிருப்பதை நேரில் காணலாம். ஆங்கில முறையில் வெள்ளை பாஷாணம் பல வியாதிகளுக்கு கொடுக்கப்படுகின்றது. பாஷாணங்களை உபயோகிக்கும்போது கண் சிவந்தாலும், மூத்திரம் குறைந்தாலும் அல்லது சிவந்தாலும் இதுபோன்ற துர்க்குணங்கள் காணப்பட்டால் உடனே மருந்தைநிறுத்தி நோயாளிக்கு பேதிமருந்தைக்கொடுத்து குடலை சுத்தம்செய்து கொஞ்சநாள் தாமதித்து பிறகு மருந்துகளை கொடுக்கவேண்டுமென்று ஆங்கிலமுறையில் சொல்லப்படுகின்றது. இவைகளுக்குகாரணமான பிறவி துர்க்குணம்நீங்க வழிகண்டுபிடிக்கப்படவில்லை. சகல விஷசரக்குகளையும் சுத்திசெய்து சாந்தமாக்கி உபயோகிக்கும் சுதேசவைத்தியமுறை உயர்ந்ததா? அல்லது அகப்பட்ட சரக்குகளை அப்படியே உபயோகித்து புதுபுது வியாதிகளை உண்டுபண்ணி பிறகு சமாளிக்கும் ஆங்கிலமுறை உயர்ந்ததாவென மத்யஸ்தர்களே நிர்ணயிக்குமாறு நாம் இதோடு நிறுத்திக்கொள்ளுகிறோம்.

நமது குறை.

எந்த சமூகமும் தன் குறையையுணர்ந்து அதை நிவர்த்திக்க வழிதேடாவிடில் அதன் முற்போக்கு தடைபடுமென்பது எல்லோருமறிந்ததே. அவ்விதமே சுதேச முறைகளிலுமுள்ள குறைகளை கவனித்து அதற்குத் தகுந்த பரிகாரம்தேடவேண்டியது அவசியமாகின்றது. ஆகவே சுதேச முறைகளில் குறைகளை கவனிப்போம். நூல்களின்குறை வைத்தியர்களின்குறை என அவைகளை இருவகையாகப்பிரிக்கலாம். சுதேச வைத்தியநூல்களில் வேறு வகையான குறைகளை நிரூபிக்கக்கூடாவிட்டாலும் அவைகள் மிக சுருக்கமாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. அவைகள் பின்காலத்தில் போதுமானதாகவிருப்பினும் தற்காலத்தில் சற்று விரிவை அபேக்ஷிக்கின்றன. உதாரணமாக சாரீரபாகத்தில் (physiology) ஹிருதயம், க்லோமம், புப்புசம், யக்ருத், ப்லீஹா, உந்துகம், விருக்கம், நாபி, டிம்பம், அந்த்ரம், பஸ்தி என்று உள அவயவங்களை கூறியிருப்பினும் ஆங்கில நூல்களில்போல சுதேசநூல்களில் அவைகளின் லக்ஷணம் முதலியவைகளை விரிவாக விளக்கவில்லை. நூல் எழுதிய காலத்தில் ஒவ்வொன்றும் குருவின் பக்கலிலிருந்தே கேட்டுத் தெரியவேண்டுமென்பது நூலாசிரியர் கருத்தாகயிருந்தாலும் இக்காலாபாவத்தையொட்டி அவைகளை சற்று விரிவாக வியாக்கியான ரூபமாகவோ அல்லது கிரந்த ரூபமாகவோ வெளியிடவேண்டியது அவசியமாகின்றது. இதை நினைத்தே சந்திரிகையில் ஒவ்வொரு சஞ்சிகையிலும் வைத்தியசாரம் என ஓர் பகுதி தொகுக்கப்பட்டு வருகின்றது. இதைத்தவிர சுதேச வைத்திய நூல்களில் நிவர்த்திக்கப்படவேண்டிய வேறுகுறை இருப்பதாக நாம் நினைக்கவில்லை.

ஆனால் சுதேச வைத்தியர்களிடம் பல குறைகள் இருக்கின்றன. நம்மால் கூடியமட்டில் அவைகளை நிவர்த்திக்க வழிதேடவேண்டியது நமது கடமையாகின்றது. ஜீவனோபாயம் அறியாத சிலர் எழுதப்படிக்கக்கூடத்தெரியாமல் வைத்தியனென பெயர் வகிக்கின்றனர். அபூர்வமான இரண்டொரு மருந்துகளை எவ்விதமாகவாவது சம்பாதித்துக்கொண்டு சாஸ்திரஞானமின்றி சில குறிப்பிட்ட வியாதிகளுக்கு அம்மருந்துகளை உபயோகித்து மருந்தின் யோக்கியதையால் கியாதியும் பெறுகின்றனர். பாஷையில் ஞானமுள்ள சிலர் நூல்களில் மறுபாகங்களை ஒதுக்கிவிட்டு சுலபமாகச் சொல்லப்பட்டிருக்கும் மருந்துவகைகளில் சிலவற்றை தன் மனம்போனபடி தயாரித்து உடனே வியாதிஸ்தர்களுக்கு உபயோகிக்க

ஆரம்பிக்கின்றனர். அவை சிலசமயங்களில் பலன் அளித்தும் அளியாமலும் போகின்றன. சாஸ்திரக்கியானமில்லாத இந்தபோலி வைத்தியர்களுடன் பழகிய சிலர் சுதேச வைத்தியம் சாஸ்திர முறைக் கேற்றதல்லவென்கின்றனர். சிலர் தங்களை சம்ஸ்கிருத வைத்தியரென பெருமைசொல்லிக்கொண்டு உண்மையில் சில தமிழ் நூல்களை ரகசியமாகப் பார்த்து ஔஷதங்களை சேகரித்துவைத்துக் கொண்டு அவைகளுக்கு வேறு பெயர் கொடுத்து உபயோகிக்கின்றனர். சிலர் குருவிடம் அணுகாது சிலவடமொழி நூல்களை தாங்களே தாறுமாறாக அர்த்தம்செய்துகொண்டு சாஸ்திரங்களின் பெருமையைக்கெடுக்கின்றனர். உதாரணமாக சில வடமொழி நூல்களை தவறாகப்படித்து வைத்தியம்செய்துகொண்டுவரும் ஒரு பெரியவர் சம்பாஷணையில் அநேகம் அருமையான வடமொழி வைத்தியவார்த்தைகளுக்கு தமிழில் சரியான அர்த்தம் தான் கண்டுபிடித்துவிட்டதாகச்சொன்னார். அதாவது காகோலி என்ற வடமொழி பதத்துக்கு காக்கைகொல்லி என தமிழில் மூலிகையின்பெயர் என்பது அன்னார் ஆராய்ச்சியில் கண்டுபிடித்த ரகசியப்பொருள். நமது சுதேச நூல்களுக்கு நேர்ந்த கதியை யோசித்தால் யாரும் துக்கியாமல் இருக்கமுடியாது. காக்கைகொல்லி என்பது ஓர் விஷப்பூண்டு. காகோலி என்பது ஓர் அமிர்தகுணமான கிழங்கு. பெயர் சற்றேறக்குறைய ஒன்றாயிருப்பதுபற்றி அன்னார் பிரமித்து தவறாக காகோலிக்கு பதிலாக காக்கை கொல்லியை உபயோகிக்க நினைத்தனர். இம்மாதிரி பல தவறுதல் நம் சுதேசவைத்தியர்களிடம் குடிகொண்டிருக்கிறது. சாஸ்திர விஷயங்களை பேசவும் படிக்கவும் கேழ்க்கவும் பலருக்கு பிடிக்காமலிருக்கிறது. சில மருந்துகளை எழுதிக்கொள்ளுவதில் மிகுந்த உற்சாகம் காட்டுகின்றனர். இவர்கள் பேதமையைப்பார்த்து உண்மையறியாத சில ஆங்கில வைத்தியர்கள் சுதேசநூல்களே பிரயோசனமற்றனவென்று நகைக்கின்றனர். சாஸ்திரம் படித்துத் தேர்ந்தபிறகுதான் சிகித்சைசெய்யப் புகவேண்டுமென்ற விதி ஏற்பட்டாலல்லது நமது குறைகள் நிவர்த்தியாகா.

வியாதி பரவுவதேன்?

நம் நாட்டில் பல வியாதிகள் புதிது புதிதாக உண்டாவதும் உண்டான வியாதி அறவே நம்நாட்டைவிட்டகலாமலிருப்பதற்கும் காரணமென்ன? புதிய கருவிகளைக்கொண்டு வைத்திய நிபுணர்கள் சதா பரீக்ஷித்துப்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். பல கலாசாலை

கள் ஏற்பட்டு வைத்திய பட்டதாரிகளும் ஒவ்வொரு பட்டணங்களிலும் நிறைந்திருக்கின்றனர். வியாதிகளுக்கு தக்கவிதமாக உயர்ந்த மருந்துகளை கண்டுபிடித்திருப்பதாகவும் பெருமைகொள்ளுகின்றனர். ஆனால் நாட்டில் நாளுக்குநாள் புதிய வியாதிகள் பல தோன்றுகின்றன. சில நிலைபெற்றிருக்கின்றன. கேட்போர் திடுக்கிடும்படி சில மணிநேரத்தில் உயிரையும் மாய்க்கின்றன. இவையனைத்தும் எல்லோரும் அனுபவத்தில் அறிந்தவிஷயமே.

சில புழுக்கள் சரீரத்தில் பிரவேசிப்பதால் இவ்வியாதிகள் உண்டாயினவென்று சிலர் சொல்லுகின்றனர். சிலர் சுகாதாரக் (Sanitation) குறைவால் இத்தொத்துவியாதிகள் தோன்றுகின்றனவென்று சொல்லுகின்றனர். இவ்விரண்டு காரணங்களைத் தவிர வேறு காரணம் இதுவரையில் எந்த நிபுணரும் கூறியது கிடையாது. ஒவ்வொரு பட்டணங்களிலும் நாளுக்குநாள் ஜனநெருக்கமும் அதனால் சுகாதாரம் (sanitation) சீர்குலைவதும் அதிகமாகின்றதேயன்றி சில தினம் குறைந்ததாகத்தெறியவில்லை. சுகாதாரம் நிறைந்த சிறிய கிராமங்களிலும் மலை உச்சிகளிலும் இத்தொத்துவியாதிகள் பரவுகின்றன. ஒரேமாதிரியாக சுகாதாரம் கேடடைந்திருக்கும் ஸ்தலங்களில்கூட சில காலம் வியாதிகள் இல்லாமலும் சிலகாலங்களில் விசேஷமாய் பரவுவதும் சகஜமாயிருக்கின்றது. தவிர முற்காலங்களில் சுகாதாரம் நிறைந்திருந்ததாக நம்பவும் இடமில்லை.

ஆகையால் தற்சமயம் வியாதி விசேஷமாக பரவுவதற்கு காரணம் சுகாதாரக்கேட்டைவிட முக்கியமாக நவீந நாகரீகத்தால் ஏற்பட்ட துர்அப்பியாசமே. ஒவ்வொரு வியாதியையும் அணுகாது எதிர்க்கக்கூடிய சக்தியை கடவுள் பிராணிகளுக்கு இயற்கையில் அமைத்திருக்கின்றார். அச்சக்தி நாம் உட்கொள்ளும் ஸாத்விக ஆகாரத்தால் வளர்கின்றது. கெட்ட ஆகாரத்தால் அச்சக்தி மெலிவடைகின்றது. அப்பொழுது சூழ்ந்திருக்கும் பலவியாதிகளை எதிர்த்துநிற்கமுடியாது பிராணிகளின் சரீரம் அதற்கு ஈடுபடுகின்றது. பூமி, காற்று, ஜலம், சூரியவெப்பம் இவைகளின் தோஷங்களால் பற்பல வியாதிகளுக்கு காரணமான புழுக்கள் உண்டாகி வியாதிகள் பிராணிகளுக்கு உண்டாகின்றவென்பது சாதாரணகாரணம். இவைகளை எதிர்க்கும் சக்தி குன்றாதவரை இவைகளால் மனிதனுக்கு தீங்கு நேரிடுவதில்லை. எதிர்க்கும் சக்தி குறைவுபடும் காலத்தில் வியாதிகள் சரீரத்தை பிடிக்கின்றன. அச்சக்தியை விருத்திசெய்து கொள்ளுவதும் குறைத்துக் கொள்ளுவதும்

மனிதன் பிரயத்தனத்தைப் பொறுத்திருக்கின்றது. அச்சுபாவ வலிமைகெடுக்கும் ஆகாரங்களுக்கு ராஜஸ ஆகாரமெனப் பெயர். "சோகமோஹ ஆமயப்ரதா:" என ராஜஸ ஆகாரத்தில் வரும் கேட்டை பெரியோர்கள் முற்காலத்தில் தங்கள் அறிவால் விலக்கினார்கள். சாத்விக ஆகாரத்தின் மேன்மையை கவனித்து உட்கொள்ளக்கூடிய சாத்விக ஆகாரத்தைப்பிரித்து சமூக ஆசாரத்தில் ஓர் அம்சமாக அமைத்தனர். தற்காலம் அவ்வரம்புமீறி சாத்விக ஆகாரங்களை புறக்கணித்து நவீன நாகரீகத்தில் மயங்கி ராஜஸ ஆகாரங்களை உட்கொள்ளுவதே வியாதி பரவுவதற்கு விசேஷகாரணமாகின்றது. இவற்றுள் பிரதானம் காபி.

காபி.

இதை யறியாதார் யாருமிலர். சிறுகுழந்தைகள் முதல் வயது சென்றவர்கள்வரை அனேகமாக எல்லாரும் ஒவ்வொருகுடும்பத்திலும் உபயோகிக்கின்றனர். நமக்கு கிடைத்த நாகரீகங்களில் இது முக்கியமாகும். எந்த சரீரத்துக்கும் ஒற்றுமைகொள்ளாத ஓர் விஷமாக இதைச் சொல்லலாம். புகையிலை முதலிய விஷ பதார்த்தங்களை ஆரம்பத்தில் சரீரம் ஏற்றுக்கொள்ளாது பிறகு வாடிக்கையால் ஏற்றுக்கொள்ளச்செய்வதுபோல காபியையும் ஆரம்பத்தில் சரீரம் ஏற்றுக்கொள்வதில்லை. முதலில் அதைபருகுவோர் வயிற்றுப்பிரட்டல் முதலிய பல தொல்லைகளுக்கு உள்ளாக நேரிடுகின்றது. ஆனால் புகையிலை உபயோகத்தால் தொல்லைகள் சகிக்கமுடியாதனவாகின்றன. காபியில் அத்தொல்லைகள் சகிக்கக்கூடியனவாகவும் சுவல்பகாலத்திலேயே நீக்குப்போய்விடக்கூடியவைகளாகவுமிருக்கின்றன. சரீர இயற்கைக்கேற்ற எந்த பொருளும் எவ்வித தொந்திரவும் உண்டுபண்ணமாட்டாது. இயற்கைக்கு ஏற்காத பொருள் சரீரத்தில் புகில் குடல் முதல் ஒவ்வொரு சரீரபாகமும் அதை சகியாது முதலில் தத்தளிக்கின்றது. பிடிவாதமாக சிலகாலம் உபயோகித்தவுடன் சரீரபாகங்கள் கடைசியாக அந்த பதார்த்தத்தை ஏற்றுக்கொண்டு தன் வலிமை இழக்கின்றன. "ரோகாஸ்ஸர்வேபி மந்தேக்னௌ" என்று எல்லா வியாதிகளும் அக்னிபலம் குறைந்தே வருகின்றன. அக்னிபலம் சரியாகவிருப்பதற்கு பித்தாசயம், கிரஹணி (liver) இவைகள் சரியான ஸ்திதியில் இருக்கவேண்டும். அவை வலிகுன்றாது தன்தொழிலை சரிவர நடத்திவரின் யாதொரு வியாதியும் அணுகமாட்டாது. கிரஹணி என்ற liver வேலை மந்தப்பட்டு பிரமேஹம் அல்லது diabetes போன்ற பல வியாதிகள் உண்டாவதாக பலநிபுணர்களும் அபிப்பிராயப்படுகின்றனர். சரீரத்திலிருந்து வெளியேறவேண்டிய அசுத்தங்களை வெளிப்படுத்தும்

உறுப்புகளுக்கு சகாயமாகவும், சரீரபோஷணைக்கு அவசியம் வேண்டிய சில திரவ சத்துக்களை உற்பத்திசெய்யும் (secretion) சரீர கருவிகளுக்கு சகாயமாகவும் கிரஹணீ இருப்பதால் தகுந்த ஆகாரங்களால் அதை பலப்படுத்தவேண்டியிருக்க அதைகுன்றவைக்கும் காபிபானமே நாகரீகதாப்பிபாசங்களில் முதன்மையாக விருக்கின்றது. காபியை உட்கொள்ளுவதால் முதலில் கிரஹணீ துர்பலமடைகின்றது. சரீரத்திலிருந்து அசுத்தங்களை வெளிப்படுத்தும் கருவிகளும் பலம்குன்றுவதால் அசுத்தம் ரத்தம் முதலியவைகளில் சிறிதுபாகம் தங்கிவிடுகின்றது. இது காரணத்தால் சரீரம் தளர்ச்சியடைகின்றது. நல்ல வாலிபனும் தன் தளர்ச்சியை உணருகின்றான். மிகுந்த அசக்தியையும் அனுபவிக்கின்றான். ஆனால் அதன் காரணம் காபி என்பதை அறியாமல் தன்வேலைமிகுதியால் அத்தளர்ச்சி வந்ததாக நினைக்கின்றான். உண்மையறியாத சில வைத்தியர்களும் நரம்பு தளர்ச்சியென்றும் அதற்கு பலகாரி மருந்துகள் (Nervine Tonic) சாப்பிடவேண்டுமென்றும் சொல்வதைப் பார்க்கலாம். சரீரத்தில் ரக்தமுங் குறையாமல் இடையுங் குறையாமல் ஆகாரம் பூர்ணமாக உட்கொண்டு வரும்பொழுது இத்தளர்ச்சி வரக்காரணம் என்ன? இத்தளர்ச்சிக்கு ஆளாகாத மனிதர் யாருமிலர். சம்பன்னர்கள் சரீர பிரயாசை இல்லாத காரணத்தால் இத்தளர்ச்சியை அதிகம் பொருட்படுத்துவதில்லை. தரித்திரர்கள் சரீர பிரயாசையின் மிகுதியால் இத்தளர்ச்சியை அதிகமாக உணருகின்றனர். கிரஹணி மெலிவடைந்த பின்னர் பீலிஹா (spleen) என்ற அவயமும் மெலிவடைகின்றது. ரக்தத்திற்கு மூலகாரணமாகிய இவ்வுறுப்புகள் மெலிவடைந்தவுடன் இயற்கை வலிமைகுன்றி சரீரம் எந்த வியாதியையும் எதிர்க்கச் சக்தியற்றதாகின்றது. இதே சுபாவமான மற்றொரு காரணம் குடி.

குடி.

கள் முதலிய பானவகைகள் பல நமது தேசத்தில் உபயோகப்படுத்தப்படுகின்றன. இக்குடி வழக்கத்தால் கிரஹணீ liver வலிமை இழந்து பலவியாதிகள் உண்டாகின்றன. சாராயம் முதலிய பானங்கள் அந்த உறுப்பையே முதலில் தாக்குகின்றது. "பித்தாஸ ரஞ்ஜணம்" என்று முதலில் பித்த உறுப்பாகிய கிரஹணியையும் பிறகு கிரமமாக ரக்தத்தையும் கெடுக்கின்றது. குளிர் தேசத்தில் வசிப்பவர்களுக்கு கூட இது கெடுதலையுண்டுபண்ணுகின்றது. அதிலும் இந்தியா போன்ற உஷ்ணதேசங்களில் கொஞ்சமேனும் இவை பொருத்தமுள்ளவை அல்ல. "பேயம் நோஷ்ணேஷுசா

ரேண" என்று பானவகைகளுக்கு உஷ்ணசம்பந்தமே கூடாதென வாக்படர் கூறினர். அதாவது குடிவழக்கமுள்ளவர் சுடுதண்ணீர் கூட அருந்தக்கூடாது. ஆகையால் சூரிய வெப்பம் மிகுந்த இந்த தேசத்தில் நவீன நாகரீக முதிர்ச்சியால் பலர் குடி பழக்கம் கொண்டதும் விபரீதமே. மூன்றாவது காரணம் புகையிலை.

புகையிலை.

முன் சொல்லியவைகள் போலவே இதுவும் காலக்கிரமத்தில் சரீர சக்தியை ஒடுக்குகின்றது. இம்மூன்றும் சற்றேறக்குறைய ஒரேவித விஷ சுபாவமுள்ளவைகள். இம்மூன்றிலும் சரீரபோஷணைக்கு வேண்டிய பாகம் ஒன்றுமில்லாததோடு சரீரத்தை கெடுக்கும் விஷாம்சங்களே நிறைந்திருக்கின்றன. சிலர் மலபந்தம் நீங்க காபி உபயோகமாகின்றதென சொல்லக்கூடும். சில சரீரங்களில் மல பிரவர்த்தியை ஒழுங்கு செய்தாலும் எல்லாருக்கும் சரீரத்தளர்ச்சியை உண்டு பண்ணுவதை அநுபவத்தில் கண்டறியலாம். இந்நாட்களில் வைத்தியன் நோயாளியின் பழக்கவழக்கங்களை முதலில் தெரிந்துகொண்டு பிறகே சிகிச்சை செய்யவேண்டியது அவசியமாயிருக்கின்றது. மேற்சொன்ன துரப்பியாசம் உள்ளவர்களுக்கு எவ்வகை வியாதி சம்பவித்தாலும் துரப்பியாச தோஷங்களுக்கு முதலில் பரிகாரம் செய்து பிறகே வியாதிக்கு ஔஷதம் செய்ய வேண்டும். அந்த பரிகாரங்கள் வைத்தியசாரம் என்ற பகுதியில் விரிவாகச் சொல்லப்படும்.

"சரக சம்ஹிதை."

(ஸ்ரீ பார்த்தஸகன் எழுதுவது)

"சரக சம்ஹிதை" என்பது ஆயுர்வேத சாஸ்திரத்தில் ஓர் முக்கியமான புஸ்தகம் என்பதை யாரும் அறிவர். சம்ஹிதை ரூபத்தில் இருக்கும் கிரந்தங்களில் அதாவது தொகுக்கப்பட்ட புஸ்தகங்களில் எல்லாம் இது மிகவும் பிரதானமானதும், பழமையானதுமாகக் கருதப்பட்டுவருகிறது. வைத்திய ஆராய்ச்சி துறையில் இறங்கிய எவரும் இதை அறியாமலிரார். இவ்வளவு உயரிய அற்புதமான சிகிச்சா முறைகளையும் வியாதி வேற்றுமைகளையும் அவைகளின் உற்பத்திக்கு ஹேதுவான காரணங்களையும் அறிகுறி

களையும் நமக்கு செவ்வனே விளக்குவதில் தனக்கு இணையில்லாமலிருக்கும் இந்த புஸ்தகத்தின் ஆசிரியர், காலம், செய்யப்பட்ட விதம் முதலியவைகளைக் கூடியமட்டில் ஆராய்வதே இந்த வியாசத்தின் நோக்கம்.

புஸ்தக ஆசிரியர்களின் சரித்திரங்களோ அல்லது நூல்போக்கு, வளர்ச்சி முதலியவைகளை குறித்த ஆராய்ச்சிகளோ, நம்நாட்டில் அதிகமாக அகப்படுவது துர்லபம். இவைகளை எழுத்து மூலமாக சேமித்துவைக்கும் வழக்கம் இந்த தேசத்தில் இல்லாதது வருந்தத்தக்கதுதான். எங்கேயாவது அவசியம் நேர்ந்தபோது அவர்கள் எழுதியிருக்கும் குறிப்புகளிலிருந்தும் வியாக்கியான கர்த்தர்களின் கூற்றுகளிலிருந்தும் இதுவிஷயமான விபரங்களை நாம் வெகு சிரமத்துடன் தெரிந்துக்கொள்ள வேண்டியிருக்கிறது இத்தகைய கஷ்டம் வைத்திய நூல்களின் ஆராய்ச்சித்துறையில் அபரிமிதம். மேலும் இவ்வித முயற்சிகளில் நமக்குப் பெருந்தடையாயிருப்பது மற்றொரு விஷயம். மேற்குறித்த விஷயங்களின் ஆராய்ச்சிகளின் முடிவுக்கு இன்றியமையாத அறிகுறிகளை நமக்கு காட்டவல்ல சாதனங்களையும் பழைய மூலப்பிரதிகளையும் ஐரோப்பியர் யாருமறியாமல் லண்டன், கொண்டுபோய் சேமித்துவைத்துக்கொள்ளுகிறார்கள். அப்படி அவர்களின் கைகளுக்கு அகப்படாமல் எங்காவது இரண்டொரு கைப்பிரதிகள் தப்பியிருந்தால் அவைகளின் சொந்தக்காரர் அவைகள் தம்மிடம் இருப்பதையும் வெளியிடுவதில்லை. நூல் பாஷை முதலியவைகள் சரித்திர ஆராய்ச்சிகளின் இவ்வளவு கஷ்டங்கள் இருக்கின்றன. ஆயுர்வேதப் பிரகடனத்திற்காக தோன்றியிருக்கும் 'சந்திரிகா' இத்துறையில் சிறிது முயற்சிப்பாளா? சரகர் பெயரால் வழங்கப்படுகிற சம்ஹிதை தொகுப்பு நூலாகிய இத்தொன்னூல் சாகர் என்ற மஹரிஷி ஒருவரால் சேகரிக்கப்பட்ட புஸ்தகமென்று நமது வைத்திய சகோதரர்களால் கருதப்பட்டு வருகிறது. ஆனால் விஷயங்களை உற்று ஆராய்ந்த எவரும் அதை எழுதி முடித்தது இருவராக இருக்கவேண்டும் என்ற முடிவுக்கு வராமலிருக்கமாட்டார்கள். சரகர் காலத்திற்குபின் தோன்றிய முக்கிய முதல்நூலாசிரியர்களின் புஸ்தகங்களின் சங்கிரஹம் இந்த சம்ஹிதையின் பின்பாகத்தில் காணப்படுகிறது. இன்னும் இதை நிரூபிக்கக்கூடிய தகுந்த சான்றுகள் பல இருப்பினும் விரிவஞ்சி விடுகிறேன். மேலும் இது ஒன்றே போதுமானது.

இதில் சரகசம்ஹிதையை எழுதியவர்கள் இருவர் என்றோம். அவர்கள் சரகரும் திருடபலரும் ஆவர். இருவரும் காஷ்மீர தேசத்தவரேயாயினும் ஒரு காலத்தவரல்லர். முந்தியவர் கி. பி. இரண்டாவது நூற்றாண்டில் இருந்தவர். பிந்தியவரான திருடபலர் என்பவரோ அவருக்கு 5, 6 நூற்றாண்டுகளுக்குப் பின் வசித்துவந்தவர். இருவரும் அவரவர் நாட்களில் பொதுவாக சம்ஸ்கிருத பாஷையிலும் நூல்களிலும் விசேஷமாக வைத்திய விஷயங்களிலும் ஆராய்ச்சியும் அனுபவமும் முதிர்ந்த அறிவாளிகளாய் விளங்கியவர்கள் என்பதற்கு போதிய ஆதாரங்கள் இருக்கின்றன. சரகர் 2-வது நூற்றாண்டில் செய்துவைத்த சம்ஹிதையை திருடபலர் 8-வது நூற்றாண்டில் பூர்த்தி செய்தார்.

கிறிஸ்து பிறப்பதற்கு அநேக நூற்றாண்டுகளுக்கு முன் இந்நாட்டின் வடகோடியில் ஹிமோத் பர்வதச்சாரலில் காஷ்மீரதேசத்தில் டாக்ஸிலா (Taxilla) என்ற இடத்தில் பேர்போன சர்வகலாசங்கம் ஒன்று மிக உயரிய கொள்கைகளுடன் பல்வேறுபட்ட அறிவு அபிவிருத்தி விஷயங்களில் பிரசாரமும் ஆராய்ச்சியுஞ் செய்து வந்ததென்பதை நம் நாட்டின் சரித்திரத்தை சிறிதேனு முணர்ந்த எவரும் அறிவர். இந்தக் கல்விக் கழகத்தையும் அது செய்துவந்த அரிய வேலைகளையும் போற்றாத புராதன சரித்திர ஆராய்ச்சித் துறைகளில் வேலைசெய்யும் ஆசிரியர்கள் இல்லை. நமது முன்னோர் கல்வித்துறைகளில் அடைந்திருந்த தேர்ச்சிக்கும் அவர்கள் அறிவைப் பரப்ப செய்துவந்த அருமையான வேலைகளுக்கும் சான்றளித்து நிற்பவை டாக்ஸில்லாவும் நலிந்தாவுமே.

டாக்ஸில்லா கல்விக் கழகத்தின் அக்ராசனராய் வீற்றிருந்தவர் அத்ரி புத்ரரான ஆத்ரேயரென்னும் பெயர் வாய்ந்த மஹரிஷியாவர். அவர் தன் வேலைகளை மிகத் திறமையுடன் தலைமை வகித்து நடத்திவந்தார். அவருடைய வைத்திய ஞானத்தைப் பற்றிப்புகழ்ந்து கூறாத புஸ்தகங்கள் இல்லை. மற்ற துறைகளிலும் தன் மாணவரை சரிவரப் பயிற்றிவந்த இவர் வைத்தியத் துறைகளில் விசேஷ ஊக்கத்துடன் தன் சிஷ்யர்களுக்கு அறிவு புகட்டியிருப்பாரென்று யூகிப்பது யுக்திக்குப் பொருத்தமானதுதான். அவருடைய முக்கிய சிஷ்யர்கள் அறுவரில் மிகவும் பிரதானமானவர் அக்னிவேசர் என்பார் ஒருவர். இவர் தன் ஆசானிடமிருந்து சரீர சாஸ்திரங்களிலும், பதார்த்த குணங்களைப் பகரும் நூல்களிலும் தக்க அறிவைப்பெற்று அபிவிருத்தி செய்துகொண்டது மட்டுமன்றி அனுபவத்தில் அவைகளை ஆராய்ச்சி செய்தும் வைத்திருந்தார். அவர்

கிறிஸ்துவுக்கு சிலநூறு வருஷங்களுக்குமுன் வைத்திய விஷயமாக சில புஸ்தகங்களை எழுதியதாக யூகிக்கவேண்டியிருக்கிறது. வெவ்வேறுவித வியாதிகளின் காரணம், குணம், அறிகுறிகள் சிகிச்சா முறை முதலியவைகளைப் பற்றித் தனித்தனிக் கிரந்தங்கள் இவர் செய்திருப்பாரென்று எதிர்பார்ப்பது நியாயமே. இவரால் எழுதப்பட்ட பல புஸ்தகங்களில் காணப்பட்ட விஷயங்களின் சாரத்தை தொகுத்து வைத்ததே சரகர் நமக்கு செய்தவேலை. தான் சுயமாக புஸ்தகமெழுதியதாக அவர் சொல்லவே இல்லை. தன்னுடையதென்று காட்டிக்கொள்ளவுமில்லை. தான் முந்தியவர்களின் முதறிவால் விளைந்த பயன்களை ஒருங்கு திரட்டியதாகவே நமக்குத்தோன்றும்படி எழுதிக்கொண்டு போகிறார். சரகர் இரண்டாவது நூற்றாண்டில் தான் ஆரம்பித்த புஸ்தகத்தை என்ன காரணத்தாலோ முடிக்காமல் விட்டுவிட்டார்.

அதை முடித்து பூர்த்தி செய்யும் வேலை 8-வது நூற்றாண்டில் அதே காஷ்மீர நாட்டில் உதித்த திருடபலர் என்பவருக்கு ஏற்பட்டது. திருடபலர் சரகர் காலத்துக்கும் தன் காலத்திற்கும் இடையில் தோன்றிய வைத்தியநிபுணர்களால் எழுதப்பட்டகிரந்தங்களின் சாரத்தைத் திரட்டி சரகர் குறையாய் வைத்திருந்த கிரந்தத்துடன் சேர்த்து வெளியிட்டார். சரகர் காலத்துக்குப் பிறகு தோன்றியவர்களில் முக்கியமானவர்கள் வாக்படர், மாதவர் முதலியவர்கள். வாக்படர் என்பவர் சரகர் சுசுருதர் இவர்கள் எழுதியவைகளை ஆதாரமாக வைத்துக்கொண்டு சில புஸ்தகங்கள் எழுதினதுமன்றி பேடர், காங்காயனர் என்ற இருவருடைய புஸ்தகங்களிலிருந்தும் இவர் தன்னுடைய விஷயங்களை சேகரித்திருக்க வேண்டுமென்று தோன்றுகிறது. மாதவரால் எழுதப்பட்ட நிதானம் முதலிய இரண்டு புஸ்தகங்கள் இன்னும் இருக்கின்றன. அவைகளையும் இவர் திருடபலர் உபயோகப்படுத்தியிருக்கவேண்டுமென்பது திண்ணமாய்த் தெரிகிறது.

திருடபலர் சரக சம்ஹிதையின் எறக்குறைய மூன்றில் ஒரு பாகத்தையாவது எழுதியிருப்பார். அவர் சில விஷயங்களை வாக்படரின் அஷ்டாங்க சங்கிரஹம் முதலிய நூல்களிலிருந்தும் மாதவர் எழுதிய நிதானம் முதலிய புஸ்தகங்களிலிருந்து சேகரித்து சரகர்செய்துவைத்திருந்த தொகுதியுடன் கூட்டி, ஒரு பெரியசம்ஹிதை யாக்கினதுடன் நிற்கவில்லை.

அப்படியாரும் நின்றிருக்கமுடியாது. நமக்கு முந்திய ஒருவரின் புஸ்தகத்தை பதிப்பிப்பவர் தம்முடைய கைவேலையையும் காட்டுவது இயற்கையே. அதே மாதிரி திருடபலரும் சரகர் எழுதியவைகளை சீர்திருத்தம் செய்யக்கூடியமட்டில் முயற்சித்திருக்கக்கூடுமென்பது நடக்கக்கூடாததல்ல. அப்படி அவர் சரகருடைய தொகுப்பில் தலையிட்டிருக்கிறார் என்பதற்கும் வேண்டிய அடையாளங்கள் காணப்படுகின்றன. ஆனால் எந்த அளவுக்கு இவர் தன்னுடைய அபிப்பிராயங்களை முந்திய அத்தியாயங்களில் புகுத்தினாரென்றாவது அல்லது எந்தெந்த இடங்களில் அவைகளை மாற்றி பதிப்பித்தாரென்றாவது கண்டுபிடித்து முடிவுசெய்வது சாத்தியமல்ல. திருடபலர் எழுதிய விஷயங்களைக்கொண்ட அத்தியாயங்களே அங்கு மிங்கும் புஸ்தகத்தில் விரவிக்கிடப்பதால் நிச்சயமாய் இன்னார் செய்ததென்று தீர்மானிக்கமுடியாமல் இருக்கும்போது அவர் சரகரின் தொகுப்பில் செய்த மாறுதல்களின் அளவைக் கூறப்புகுவது அசாத்தியமான விஷயம். ஆனால் இவர் தான் சில தொகுத்து சம்ஹிதையுடன் சேர்த்ததுடன் நில்லாமல் சரகரின் புஸ்தகத்திலும் கைவைத்து சீர்திருத்த முயன்றிருக்கவேண்டுமென்பதுமட்டும் நிச்சயம்.

சரக சம்ஹிதை இருவரால் தொகுக்கப்பட்ட நூல் என்றும் அதை எப்படி இருவரும் எழுதிமுடித்தார்கள் என்பதையும் இதுவரை ஆராய்ந்தோம்.

இனி சரக சம்ஹிதைக்கு ஏற்பட்டிருக்கும் வியாக்கியானங்களைக்குறித்து சில வார்த்தைகள்சொல்லி நமது வியாசத்தை முடித்துக்கொள்வோம். முதல் முதலில் சம்ஹிதைக்கு வியாக்கியானம் எழுதியவர் சக்கரபாணிதத்தர் என்பவர். இவருடையவியாக்கியானம் மிகவும் பிரயோஜனம் தரத்தக்கதாயும் தெளிவாகவும் இருக்கிறது. அவருக்குப்பிறகு இன்னும் பலரும் வியாக்கியானங்களும் விளக்கங்களும் எழுதியுள்ளார்கள். சமீபத்தில்கூட புனாவிலும், பர்ஹாம்பூரிலும், கல்கத்தாவிலும், நவீன சரித்திர ஆராய்ச்சி நிபுணர்களால் சிலபதிப்புகள் முகவுரைகளுடன் வெளிவந்திருக்கின்றன.

ஆகாரம்.

(2-வது சஞ்சிகையின் 16-வது பக்கத்தின் தொடர்ச்சி)

தவிர, மிக சத்துள்ள வஸ்துக்களையும் அல்பமாக உட்கொள்ளுவதென்பது பிராணிகளின் இயற்கைக்கு விருத்தம்: கிடைக்கும்

உணவுகளை பூர்ணமாக உட்கொள்ளுவதே பிராணிகளின் சுபாவம். இயற்கை உணவுகளை உட்கொள்ளும் மற்ற பிராணிகளுக்கு இது அனுகூலமாக் விருந்தாலும் மனிதனுக்கு இது மிகுந்த பாதகத்தை விளைவிக்கும். பால் முதலிய பதார்த்தங்களை இயற்கை ரூபமாக உபயோகித்து வயிற்றுப்பொருமல், அஜீர்ணம் முதலிய வியாதிகள் வருவதைப்பார்க்கலாம். அவைகளை பக்குவப்படுத்தி உபயோகித்து ஆரோக்கியம் அதிகமாவதையும் பார்க்கலாம். காய்ச்சின நீருக்கும் காய்ச்சாதநீருக்கும் உள்ள குணதோஷங்களை அனுபவத்தில் யாரும் அறியக்கூடியதே. பின்பு இதைப்பற்றி விரிவாக ஆராய்வோம்.

திரிதோஷ தத்வம்.

கல்கத்தாவில் வசிக்கும் மஹாமஹோபாத்யாயர் கவிராஜ் கணநாத்சேன் அவர்கள் M. A. L. M. S திரிதோஷங்களைப் பற்றி கூறும் அபிப்பிராயத்தின் சாரமாவது.—

வாயு, பித்தம், சிலேஷ்மம் இம்மூன்று தோஷங்களை நம்முன்னோர்கள் கண்டுபிடித்தது ஓர் அபூர்வ ரகசியமெனச் சொல்லவேண்டும். ஆனால் ஆங்கில வைத்தியர்கள் இதன் அருமையை அறியாது இம்முத்தோஷங்களை காற்று, மஞ்சள்நீர், கோழையென இவ்விதம் கூறுகின்றனர். ஆனால் உண்மையில் இவைகளின் சுபாவங்களை விளக்கில் அது ஓர் பெரிய கிரந்தமாக விரியுமாதலின் அதன் தத்வத்தை மாத்திரம் சொல்லுகிறேன். வாயு என்பது அவர்கள் நினைப்பது போல காற்று (wind) அல்ல; ஆனால் ஸ்பர்சம் முதலியவைகளை மூளைக்குக் கொண்டு சேர்ப்பதும், மூளையில் உதிக்கும் எண்ணங்களை அனுஷ்டிக்கும்படி இந்திரியங்களைத் தூண்டுவதும், ரூபம், சப்தம் முதலியவைகளை மூளைக்கு உணர்த்துவதும் ஆகிய காரியங்களைச் செய்யும் நரம்புகளின் ஸ்வபாவத்தை (Nervous systom) யே குறிக்கின்றது.

அவ்விதமே பித்தமென்பது காய்ச்சல் முதலிய வியாதிகளில் வாந்தியால் வெளியேறும் மஞ்சள் நீரை (Bilo) யே பிரதானமாகச் சொல்லுகிறதென்பது சரியல்ல. ஆனால் சரீரத்தில் ஜீவதசைக்கு இன்றியமையாத உஷ்ணத்தின் உற்பத்தியை (Thormogenisis) க் குறிக்கின்றது. சரீரத்திலிருக்கும் போஷக சத்துக்களை ஜீவாதார சத்தாகச் செய்ய சரீரத்தின் ஒவ்வொரு அணுக்களிலும் நடைபெறும் கிரியைகளையும், ஜீர்ணகாரித் தொழிலையும், ரக்தத்தில் நிறம் கொடுத்தலையும், சரீரத்தில் உஷ்ணத்தொழில் நடைபெறக் காரணமாகவும் மேற்படி உஷ்ணத் தொழிலால் ஏற்பட்டதாயுமுள்ள பல

வித திரவசத்துக்களை உண்டுபண்ணுவதையும் பிரதானமாக குறிக்கின்றது.

அவ்விதமே கபம் என்பதும் கோழையை (Phlem) ச் சொல்லுவதல்ல. ஆனால் Thermotaxis என்கிற உஷ்ண சமனத்தொழிலையும் சரீர தாரணைக்கு அத்தியாவசியமான பலவித சத்துக்களின் உத்பத்தியையும், (அதாவது சரீரத்தில் சந்திபந்தங்களிலோ அல்லது மற்ற இடங்களிலோ வழுவழுப்பை உண்டுபண்ணக் கூடிய திரவங்கள் (synovia) போன்றவைகள், பிரதானமாககுறிக்கின்றது.

ஆனால் பித்தம், கபம் என்ற பதங்கள் சிலசமயங்களில் அவைகளின் விகாரமான (நிலைமை தவறி ஏற்பட்ட) மஞ்சள்நீர், கோழை இவைகளில் உபயோகப்படுத்தப் படுகின்றன. அதைக்கொண்டு அவ்வார்த்தைகளுக்கு அதுவே பொருளெனக் கொள்ளுதல் சரியல்ல.

ரோமன் வைத்தியர்களும் கிரேக்க வைத்தியர்களும் பழைய காலத்தில் சொல்லிவந்த திரிதோஷங்களுடன் நமது திரிதோஷங்களை நாம் ஒப்பிடலாகாது. அவர்களும் நமது முறைகளிலிருந்தே மேற்சொன்ன மதத்தை எடுத்துக்கொண்டிருந்த போதிலும் அதன்சூட்சுமத்தை அறியத் தவறினர். தற்காலம் சிலர் திரிதோஷங்களைப் பரிகாசம் செய்தபோதிலும் நாளடைவில் பரிசீலனையால் அதன் யோக்கியதை வெளியாகுமென்றே நம்புகிறேன். வியாதிகளின் காரணமும் லக்ஷணமும் நன்கு விளங்க இன்றியமையாத பல தத்வங்களை திரிதோஷங்கள் வியக்தமாக்குகின்றன. எல்லா வைத்தியர்களுக்குமே பொதுவில் பதார்த்தகுணங்களை அறிவதில் இவைகள் உபயோகமாகின்றன. மாத்சர்யமின்றி படிப்பவர்களுக்குத் திரிதோஷங்களில் நம்பிக்கை தானாகவே உதிக்கும். நன்றாக படித்தறியாத சுதேச வைத்தியர்கள் கூட இந்த திரிதோஷங்களின் அறிவால் பதார்த்த குணங்களையும், வியாதிகளின் காரணங்களையும் வியக்தமாக அறிந்து நோயாளிகளுக்கு மிகுந்த குணம் உண்டாக்குவதை நாம் பிரத்யக்ஷத்தில் அறிகிறோம்.

இத்திரிதோஷங்களுக்கு இரண்டு ரூபங்கள் உள. முதலாவது ரூபம் போஷண ரூபம். அந்த ரூபம் சரீரத்திற்கு வெளியில் தட்டுப்படாது. அந்த ரூபம் சரீரத்திற்குள் அதற்குரிய போஷணை வேலையைச் செய்கிறது. இரண்டாவது ரூபமாவது விகிருதரூபம் அது கண்ணுக்குத் தெரியும். 'சரீரத்தில் தன் வேலையைச் செய்யும்பொழுது நிலைதவறி கெட்டு அதனால் ஏற்படும் சில மலபாகங்கள் வெளியேறும். அதுவே மஞ்சள் நீர் (bile) என்றும் கபம் phlom) என்றும் சொல்லப்படுகிறது.

சில காய்ச்சல்களில் இயற்கைக்கு மிகவும் அதிகமாக அதாவது 105 அல்லது 105½ டிக்கிரி வரை உஷ்ணம் அதிகரித்தும் ஆரம்பத்திலிருந்து இரண்டாவது நாளில் குணமாகின்றது. இப்படி பலவிதமாக காய்ச்சல் சுபாவம் இருப்பதை உத்தேசித்தே இவ்வியாதிக்கு "மிருத்யு" என்றே பெயரிட்டனர்.

Typhoid = ஸந்ததஜுரம் = விடாகாய்ச்சல் — டைபாயிட் என்று ஆங்கிலத்திலும், சந்ததஜ்வரமென வடமொழியிலும், விடாக் காய்ச்சல் என தமிழிலும் கூறப்படும் காய்ச்சலின் லக்ஷணமாவது பெரும்பாலும் இவ்வியாதி முதலில் நிதானமாகவே ஆரம்பிக்கின்றது. இவ்வியாதிவருவதற்குமுதலில் இன்னதென்று சொல்லமுடியாமல் சரீரம் வேதனைப்படும். கை கால் முதலிய அவயவங்களில் வலி தோன்றும், தலைவலி காணும், பசிகுறையும், சரீரத்தில் சிறுகுளிர் உண்டாகும். ஆனால் இந்த காய்ச்சல் ஆரம்பித்த சிலதினம்வரை நோயாளி அங்குமிங்கும் நடமாடமுடியும். சரீரத்தில் காய்ச்சல் பலமாக இல்லையென்று நோயாளி நினைக்கக்கூடும். அநேகமாக இவ்வியாதி ஆவணி, புரட்டாசி, ஐப்பசி மாதங்களில் அதிகம் பரவுகின்றது. மற்ற காலங்களிலும் அபூர்வமாக இருக்கின்றது. சுகாதார வசதியுள்ள சிறு கிராமங்களில் அதிகமாக இது தோன்றுவதில்லை. சுகாதாரம் மிகக் குறைந்த இடங்களில் விசேஷமாக தென்படுகின்றது. சாக்கடை துர்நாற்றம் வீசும் இடங்களில் விசேஷமாக காணக்கூடும். சாக்கடைத் தண்ணீர் கலந்த கிணறு, குளம் இவைகளின் ஜலத்தை உட்கொள்ளுவதாலும் உண்டாகலாம். இவ்வியாதிக் காரர்களுடைய மலம், மூத்திரம், கோழை இவைகள் கலந்த நீரை உட்கொள்ளுவதாலும் இவ்வியாதி ஜனிக்கக்கூடும். இவ்வியாதிக்காரர்கள் அணிந்த வஸ்திரம், உடுப்பு படுக்கை இவைகளை உபயோகிப்பதாலும் வரக்கூடும். இவ்வியாதிக்காரருடைய உடுப்பு முதலியவைகளை சுத்தப்படுத்திய குளம் முதலியவற்றின் ஜலத்தை உபயோகித்தும் வருவதுண்டு. இந்த வியாதி வாலிபர்களுக்கே பெரும்பாலும் காணுகின்றது. விருத்தர்களுக்கும் வரும். இவ்வித்தியாசத்திற்கு காரணம் எவராலும் சொல்லக்கூடவில்லை. சில வியாதிகள் சிலருக்கே விசேஷித்து காணுவதை அநுபவத்தில் காணலாம். பிரமேஹம் என்னும் நீரிழிவு வியாதி (diabctes) பெரும்பாலும் புருஷர்களுக்கே காண்கின்றது. இதற்கு காரணம் வியாதியின் சுபாவமென சுதேச நூல்கள் கூறுகின்றன. வியாதிக்காரர்களைத் தொடுவதால் சில வியாதி ஒட்டுவாரொட்டியாக பரவுகின்றது. ஆனால் இது அவ்விதமல்ல. வியாதிக்காரர்களின் சரீரத்தி

லிருந்து வெளியேறும் மலம், மூத்திரம், எச்சில் முதலியவைகளில் கலந்திருக்கும் ஓர் சாதி புழுவை உட்கொள்ளுவதாலேயே ஒட்டுவாரை யொட்டி பரவுகின்றது. இவ்வியாதி குடலைக் கெடுக்கின்றது. வியாதியின் ஆரம்பத்தில் சிலருக்கு மலபந்தம் இருக்கலாம். பிறகு காலகிரமத்தில் மலம் இளகி உடைந்து வெளியேறும் அப்பொழுது சுவல்ப அஜீர்ணமெனத் தோன்றும். ஆரம்பத்திலிருந்து ஆகாரப்பை கெடுகின்றது. ஓக்காளம் வாந்தி இவையுண்டாகும். உட்கொண்ட ஆகாரம் வயிற்றில் தங்காது. நாடி மிகத் துடியாக நடக்கும். இக்காய்ச்சல் திரிதோஷங்களின் பிரகோபத்தால் வந்தபோதிலும் அவைகளுள் ஒவ்வொன்று மிகவும் பிரகோபித்து வருவதால் இதை வாத சந்ததம் என்றும் பித்த சந்ததம் சிலேஷ்ம சந்ததமென்றும் மூவகையாகப் பிரிக்கலாம். அவற்றுள் வாதசந்ததம் ஏழு நாளிலும், பித்தசந்ததம் பத்துநாளிலும், சிலேஷ்மசந்ததம் பனிரெண்டு நாளிலும் குணம் அல்லது மரணத்தைக் கொடுக்கின்றது என்று அக்கிவேசர் கூறுகின்றார். வாதசந்ததம் பதினைந்து நாளிலும், பித்த சந்ததம் பதினெட்டு நாளிலும், சிலேஷ்மசந்ததம் இருபத்திரண்டு நாளிலும் சமனத்தை அல்லது மரணத்தைக் கொடுப்பதாக ஹாரீதர் நினைக்கின்றனர். ஆனால் இப்பொழுது 28 நாள்வரை இவ்வியாதி நீடித்திருப்பதைப் பார்க்கலாம். கால வித்தியாசத்தால் சில வியாதிகள் அதிக காலம் நீடித்திருந்தாலும் வியாதியின், சுரூபத்திலும் சிகித்சையிலும் வித்தியாசம் கிடையாது. முன் சொல்லிய எண்வகைக் காய்ச்சலைக் காட்டிலும் இதில் சுரவெப்பத்தால் தாதுசோஷணம் அதிகமாக நேருகின்றது. அதற்கு வியாதியின் சுபாவந்தான் காரணம். இக்காய்ச்சலில் தோல் வாட்சியும் அதிக சூடும் காணும். குறிகண்ட ஏழாவது நாளில் அநேகமாக நோயாளி படுத்த படுக்கையாக ஆகிவிடுவதுடன், பசியென்பதே யில்லாமலிருக்கும். நாக்கில் அதிக மாசுபடிந்திருக்கும். இக்காலத்தில் காய்ச்சல் சாயங்காலத்தில் அதிகமாவதும் காலையில் சற்று தணிவதுமாகயிருக்கும். மூத்திரம் மிகவும் கலங்கி அல்பமாக இறங்கும். இவ்வியாதியில் மூத்திரக் குண்டிக்காய்கள் (kedneys) சுவாசப்பை (lungs) கிரஹணி (liver) குடல் (bowels) இவைகள் கெடுகின்றன. இரவில் ஆயாசம் அதிகரிக்கும் பேதியும் தொடர்ந்திருக்கும். மலம் இளகி ஜலமாகவும் மஞ்சள் நிறத்துடன் ஓர்வித நாற்றத்துடன் வெளிப்படும். நோயாளியின் அடிவயிற்றில் வலது பக்கத்தை கையால் அமுக்கினால் ஓர்வித சப்தம் கேட்கும். வாயு அவ்விடம் அடைபட்டிருப்பதால் அச்சப்தம் உண்டாகின்றது. அவ்விடம் புண்ணாகவிருப்பதால் அப்

2/10146

படி அமுக்கும் காலத்தில் நோயாளிக்கு உண்டாகும் வேதனை அவன்முகத்தில் விளங்கும். அடிவயற்றில் வாயு சப்திக்கும். சற்று கடினமாகவும் இருக்கும். மார்பு, முதுகு, அடிவயிறு இவைகளில் தடிப்புகள் காணும். இத்தடிப்புகள் சில சமயங்களில் இல்லாமலிருப்பதுமுண்டு. உண்டாகி 2, 3 தினங்களில் மறைந்துபோவதுமுண்டு. சில சமயங்களில் இத்தடிப்புகள் 7வது நாளில் காணும். 14 வது நாளிலும் அதற்குப் பிறகுங்கூட காணுவதுண்டு. அத்தடிப்புகள் கொசு முதலியவைகள் கடித்து உண்டாகும் தடிப்புகள் போல தோன்றும். அவைகள் சற்று சிவப்பாகவிருக்கும். இத்தடிப்புகள் 18 வகை சன்னிபாதங்களிலும் மற்றும் சில பித்தசுரங்களிலும் காணும் தடிப்புகள் போலவே தோன்றும். மற்ற தடிப்புகள் சிறியவைகளாக விருக்கும். ஆகாரப்பை மிகவுங் கெட்டு ஓயாத வாந்தியும் வயிற்றுப் பிரட்டலும் உண்டாகும். சுவாசப்பைகளில் ரக்தம் அதிகம் தங்கிவிடுதலால் சிறிய இருமலும் மூச்சு அதிகரிக்கலும் தோன்றும். சிலசமயங்களில் கிரஹணீ (liver)யில் வித்ரதிக்கட்டி உண்டாகும். இவ்வியாதியில் குடல் புண்ணாவதால் அந்தவிஷம் சம்பந்தித்து மேற்படி கட்டியுண்டாகின்றது. மேற்படி புண்களால் சிறுகுடலில் சிறு துவாரங்கள் உண்டாவதுமுண்டு. 15 அல்லது 25-வது நாள்களில் இதுநேரலாம். அக்காலத்தில் மூர்ச்சை முதலிய குறிகள் காணும். அக்காலங்களில் குடல்களிலிருந்து ரக்தம் மூத்திரவழியாகவும் மலம் வழியாகவும் வெளிவரும். அச்சமயங்களில் திடீரென உஷ்ணம் தணிந்து சீதம் பிறக்கும். திடீரென உஷ்ணம் அதிகப்படின் சிறுகுடலில் புதிய புண்கள் உண்டானதாக நினைக்கவேண்டும். அல்லது புண்கள் பின்னப்பட்டு ரக்தஸ்ராவம் (bleeding) உண்டாவதாக எண்ணவேண்டும். காலையில் 105 டிக்கிரிக்குமேல் உஷ்ணமிருந்தாலும், 107 டிக்கிரிக்குமேல் எப்பொழுதாவது உஷ்ணம் அதிகப்பட்டாலும், கண்தாரை விரிந்தாலும், ஸ்மரணையின்றி படுக்கையில் மலம்போனாலும் மூக்கில் ரக்தம் வந்தாலும், மலத்துடன் ரக்தம் போனாலும், வாய் உளறி புலப்பும் அதிகமானாலும், வலிப்புகள் தோன்றினாலும், எப்பொழுதும் ஸ்மரணையற்றிருந்தாலும், கைகள் நடுங்கி படுக்கைத் துணிகளைப் பிடித்திழுத்தாலும், வியாதி அசாத்தியமென நினைக்க வேண்டும். இவ்வியாதியுடன் பலமான அதிசாரம் சேர்ந்துவிடில் ஆபத்தாகவே முடியும். இவ்வியாதியால் கிரஹணியும் (liver) பிலிகாவும் (spleen) அளவுக்கு மிஞ்சி பெருத்துவிடுகின்றன.

இவ்வியாதியின் சாத்திய குறிகளாவன.— உடம்பில் முன் சொல்லிய தடிப்பு கண்டவுடன் கிரமமாக காய்ச்சல் குறைய ஆரம்பிக்கும். மூன்றாவது வாரத்தின் ஆரம்பத்தில் கொஞ்சம் குணமாகத்தோன்றும், காய்ச்சல் தணிவும் நீடிக்கும், அதிசாரம் அடங்கும் உடம்பில் வலி குறையும், நாக்கில் மாசு நீங்கும், இரவில் தூக்கம் வரும், பசி திரும்பும்.

இவ்வியாதியில் நாக்கில் சிறிய பிளவுகள் உண்டாகும், உதடு வெடிக்கும், அவ்வெடிப்புகளில் ரக்தம் வரும், அதைப் பார்த்து சிலர் தாறுமாறாக மருந்து கொடுத்து வந்ததாக வைத்தியனை அவமதிப்பதுமுண்டு. உண்மையில் அவை வியாதியின் குறிகளே. பற்களில் மலம் கட்டி கட்டியாகத் தோன்றும். திடீரென நோயாளிக்கு மாமிசமும் பலமும் குறையும். இரண்டு பாதங்களில் வீக்கம் உண்டாகும்.

ஜ்வர சிகித்சை.

காய்ச்சல் நோயாளியை பூமிக்குச் சற்று உயரமான கட்டில் முதலியவைகளில் படுக்கவைக்க வேண்டும். கயற்றுக்கட்டில், வில் கட்டில் (spring cot) இவைபோன்ற வளைவு கொடுக்கும் சாதனங்கள்கூடா. பெஞ்சுகளை உபயோகிப்பது நலம். வளைந்த சாதனங்களில் படுப்பதால் குடல்களுக்கு ஓர்வித நெருக்கம் உண்டாவதால் குடல்களில் வாயு தங்கிவிடுகின்றது. ஏற்கனவே சுரங்களில் மூத்திரக் குண்டிக்காய்களின் வேலைதடைபடுகின்றது. வளைந்த சாதனங்களில் படுப்பதில் அடிவயறு அமுக்கப்படுவதால் அவ்விடம் இருக்கும் உள் உறுப்புகளின் வேலையும் சற்று பாதிக்கப்படுகின்றது. ஆகையால் இதுகாரணம்பற்றி வளையாத நிமிர்ந்த சாதனங்களையே வியாதி காலங்களில் உபயோகிக்க வேண்டும். ஒன்று அல்லது இரண்டு பஞ்சு மெத்தைகளை சேர்த்து உபயோகிக்க வேண்டும். நோயாளி படுத்தேயிருக்க வேண்டியது அவசியமாகையால் படுக்கை மிகவும் மிருதுவாக இருத்தல் வேண்டும். இல்லாவிடில் படுக்கைப்புண் என்ற ஓர் கொடியபுண் உண்டாகும். காற்று தாராளமாக வீசவேண்டு மென்பது ஆங்கிலமதம். ஆனால் நம் சுதேச நூல்கள் அவ்விஷயத்தில் வேற்றுமை காட்டுகின்றன. காற்று நோயாளியின்மீது படக்கூடாது. நோயாளியின் அறை விசாலமாகவும் சுத்தமாகவும் வெளிச்சம் காற்று உள்ளதாகவும் இருக்கவேண்டியதே. ஆனால் காற்று வெளிச்சம் இவைகள் நோயாளியின் மீதுபடக்கூடாது. ஏனெனில் இயற்கைக்கு அதிகமான வெப்பத்

தால் சரீர தாதுக்கள் நரம்புகள் முதலியவை எல்லாம் கொதிப்படைந்திருக்கும் சமயத்தில் சற்று குளிர்ச்சி அல்லது உஷ்ணம் சரீரத்தில் பட்டவுடன் விபரீதமாகலாம். காய்ச்சல் குடிலமல்லாத காலங்களில் இவைகள் சரீரத்தை அதிகமாக பாதிக்காவிடினும் குடிலமான சமயங்களில் சற்று அவபத்தியமும் விபரீதத்தை விளைவிக்கும். தவிர குளிர்ந்த காற்று முதலியவைகளால் சரீரத்தின் மேல்பாகத்தில் சிறிய துவாரங்கள் சுருங்குவதால் வியர்வை உண்டாவது குந்தகமாகின்றது. வியர்வை உண்டாவதால் சரீரத்திலிருந்து மலாம்சம் வெளியேறுகின்றது. அது தடைபடில் மலாம்சம் வெளியேறாது ரக்தத்திலேயே தங்கி காய்ச்சல் காலத்தை நீடிக்கச் செய்கின்றது. வெய்யில் வெப்பம் முதலியவைகள் சம்பந்திப்பதால் சரீரத்தில் தாபம் அதிகரிக்கின்றது. "ஸ்வேத தேகோஷ்மணு சைவநிருத்வா தேஹோஷ்மணோபலம்" என்று பசுநாக்னி தாத்வக்நி இவைகளின் சம்பந்தத்தால் சரீரத்தில் உண்டாகும் வெப்பத்தை இவை மிகுதிபடுத்துகின்றன. ஆகையால் நோயாளியின்பேரில் காற்று வெய்யில் இவைகள் படக்கூடாது. அறையில் அதிக வெளிச்சம் இல்லாமலிருக்க வேண்டும். நோயாளியின் வஸ்திரம் படுக்கை முதலியவைகளை பிரதிதினம் புதுப்பிக்க வேண்டும். மூக்குசளி கபம் முதலியவைகளை உடனுக்குடன் சுத்தப்படுத்தவேண்டும். நோயாளியின் அறையில் வேறுசாமான் முதலியவை இருக்கக்கூடாது. அறையையும் பிரதிதினம் சுத்தம் செய்யவேண்டும். பசும் சாணியைக்கொண்டு சுத்தம் செய்வது உத்தமம். பகல் 12-மணியிலிருந்து 3-மணிவரை அவசியமானால் அறையின் ஜன்னல் கதவுகளை பூராவாக திறந்துவைக்கலாம். நோயாளிக்கு காய்ச்சல் வருவதைக்காட்டும் முற்குறிகளிலேயே இலேசான ஆகாரம் கொடுத்துவரவேண்டும். அவசியமானால் உபவாசம் செய்யலாம். சுரத்தில் நீர்குடிக்காமலிருப்பது நலம். மிகுந்த தாகமாகவிருப்பின் நீரை மிகவும் மிதமாக குடித்தல் வேண்டும். அதாவது ஒருதடவைக்கு ஒரு வாயளவு அல்லது அரை அவுன்சு நீர் உட்கொள்ளலாம். போதாவிடில் கொஞ்சம் நேரம் கழித்து அதே அளவு உபயோகிக்கவேண்டும். ஒரேயடியாக அதிகநீரை குடிப்பதைவிட கொஞ்ச அளவில் பலதடவை உபயோகிப்பதே நல்லது. பித்த சுரம் நீங்கலாக மற்ற எல்லாவித சுரங்களிலும் சுடு நீரையே உபயோகிக்கவேண்டும். அதிலும் வாதசுரத்திலும் கபசுரத்திலும் சுடுநீர் மிகுந்த நன்மைகொடுக்கும். சாராயம் முதலியவை அதிகம் உபயோகித்துவரும் சுரங்களிலும், சாராயம் மிகுதியாக உபயோகிப்பவனுக்கு வேறுகாரணங்களால் வந்தி

ருக்கும் காய்ச்சல்களிலும், பித்தம்மிகுந்த காய்ச்சல்களிலும் விஷக் காய்ச்சல்களிலும், கண் எரிச்சல், உடம்பு எரிச்சல், மிகுந்தசுரங்களிலும், அதிசாரத்துடன்சேர்ந்த காய்ச்சல்களிலும், மிகுந்த கோடைகாலத்திலும், நீரை கொதிக்கவைத்து பிறகு சூடுகை யாற்றி உபயோகிக்கவேண்டும். காய்ச்சலில் உபயோகிக்கும் நீர்கூட அடியில்கண்டவிதம் சில மூலிகைகளை சேர்த்து காய்ச்சி பிறகு உபயோகிக்கப்படுவது உத்தமம்.

மூலிகைகளாவன :— கோரைக்கிழங்கு, பர்படாகம், விலாமிச்சவேர், சந்தணக்கட்டை, சுக்கு ஆகிய இவைகள்.

மேற்சொன்ன மூலிகைகளை சம இடையாக இடித்து தூள் செய்து மேற்படிதூளில் ஒருதோலா (ஒரு ரூபாயிடையளவு) நிறுத்து எடுத்து 64 ரூ. இடையுள்ளபடியில் (இப்பொழுது சர்க்கார் படி 66 ரூ. இடைகொண்டது. ஆகையால் இந்த படியை எடுத்துக்கொள்ளலாம்) இரண்டுபடி சுத்தஜலம்விட்டு அடுப்பேற்றி ஒரு படியாக வற்றவைத்து வடிகட்டிக்கொள்ளவேண்டும். பாத்திரம் புது மண்சட்டியாக இருப்பது நல்லது. மேல்சொன்ன சரக்குகளில் ஒன்று இரண்டு அகப்படாவிட்டாலும் கிடைத்ததைக்கொண்டு தயார்செய்யலாம். மேற்சொன்ன குடிநீரால் தாகம் தணிவதுடன் காய்ச்சலும் குணப்படும். சோடாபோன்ற நாகரீக பானவகைகள் சுரத்திற்கு மிகுந்த விருத்தங்கள். அவைகளை உபயோகியாமலிருப்பதே நலம். சில ஆங்கில வைத்தியர்களும் சோடாவை பரிகரிக்கின்றனர். காய்ச்சலில் பகல் தூக்கம், ஸ்நானம், குருவான ஆகாரம், சரீரப்பயிற்சி (exercise) இவைகள் கூடாது.

தவிர காய்ச்சலில் கஷாயங்களை (decoction) உபயோகிக்கக்கூடாது. காய்ச்சலில் ஆமாசயம் என்னும் இரைப்பை (stomach) மிகவும் கெட்டுப்போவதாலும், விஷம்போன்ற ஆமாம்சம் கலந்து இருப்பதாலும் அக்காலத்தில் உட்கொள்ளும் கஷாயம் வியாதியை பெருக்குமேயன்றி தணிக்காது. அதுபோலவே ஸ்வரசம் முதலியவைகளும். ஆகையால் புதுக்காய்ச்சலில் ஆமாவஸ்தையில் இவ்வகை மருந்துகள் கூடாது. ஆனால் காய்ச்சல் வந்தவுடன் தேசாவரம் இஞ்சிபோன்றவைகளை ஸ்வரசம்செய்து கொடுப்பது நமது நாட்டு வழக்கமாயிருந்தாலும் நமது நூல்கள் அதற்கு சம்மதிக்கவில்லை. சில சாமான்ய சுரங்களில் இவ்வழக்கங்கள் பாதகத்தை விளைவிக்காவிடினும் சில குடில சுரங்களில் இம்முறைகள் மிகுந்த விபத்தை விளைவிக்கும். ஆகையால் ஆமா

வஸ்தையை நன்கு உணர்ந்து அக்காலம் முடிய மூலிகை சிகிச்சையை நிறுத்தி பஸ்ம சிந்தூரங்களையே உபயோகிக்கவேண்டும். சுரத்தின் ஆரம்பத்தில் உபவாசம் செய்யவேண்டும். ஆகாரக்குடல் மிகவும் கெட்டிருப்பதாலும், அக்னிபலம் குறைந்துபோவதாலும், உட்கொள்ளும் ஆகாரம் அன்னப்பை சென்றவுடன் அது விஷம் போன்ற பரிணாமத்தை யடைவதாலும், அந்தவிஷபரிணாமம் மேன்மேலும் சுரத்தை விருத்தி செய்வதாலும், உபவாசமே முதலில் உசிதம். உடம்பு வற்றி, மல மூத்திரங்கள் சரிவர வெளியேறி, மனதும் தெளிவடைந்து, பசி தாகம் நன்றாக உண்டாகுமளவு அவ்வுபவாசம் செய்யவேண்டும். அநேகமாக இந்நிலைமை ஒன்று அல்லது இரண்டு நாள் உபவாசத்தால் ஏற்படக்கூடும். அளவுக்கு மீறி உபவாசமும் இருக்கக்கூடாது. அதனால் அதிக பலஹாநி உண்டாகும். ஆனால் அதிக அலைச்சல், கவலை, வருத்தம், பயம் இவைகளால் உண்டாகும் காய்ச்சலிலும், ஜீர்ணசுரத்திலும், க்ஷயம் முதலிய வியாதிகளில் காணும் சுரங்களிலும், எலும்பைசுரங்களில் வாத சுரத்திலும், இந்த உபவாசம் கூடாது. அவைகளில் புஷ்டியான ஆகாரத்தைக்கொடுக்கலாம்.

காய்ச்சலில் பாலின் உபயோகம்.

காய்ச்சலில் ஏராளமாக பாலை உபயோகிப்பது ஆங்கிலமுறை. ஆனால் நமது நூல்கள் அதற்கு இணங்கவில்லை. காய்ச்சலில் ஆம நிலையில் ஆகாரக்குடல் கெட்டிருக்கும்பொழுது அவ்விடம் பால் ஆகாரம் சென்றவுடன் ஸ்தான தோஷத்தால் இதுவும் பாதிக்கப்பட்டு விஷபரிணாமத்தையடைகின்றது. மனிதன் உட்கொள்ளும் ஆகாரங்களில் ஸ்தானதோஷத்தால் கெடக்கூடியவைகளில் பாலே முக்கியமானது. தவிர வெகு சீக்கிரத்திலும் கெடும். பாலை ஜீர்ணம் செய்யக்கூடியவளவு ஆகாரக்குடல் அக்காலத்தில் பலம்பெற்றிராமலிருப்பதும் ஒரு காரணமாகும். திரவமாகவிருப்பதைக் கொண்டு ஒரு வஸ்து சுலபத்தில் ஜீர்ணமாகுமென்று நினைக்கக் கூடாது. அக்காரணம்பற்றியே. ஆரோக்கியமுள்ளவனும் நீரை அதிக அளவில் பருகலாகாதென "பிபேத் ஸ்வஸ்தோபி சால்பச:" என்று வாக்படர் கூறினர். ஆகையால் சுலபமாக ஜீர்ணமாகுமென ஆங்கிலமுறையில் கருதப்படும் பால் மேற்சொன்ன இரண்டு காரணங்களால் சுதேச வைத்தியமுறையில் ஆமநிலைமையில் உபயோகிக்கக்கூடாதென சொல்லப்பட்டிருக்கின்றது. ஜீர்ண சுரங்களில் விசேஷமாக பாலை உபயோகிக்கவேண்டும். உபவாசம் கூடாதென முன்புசொல்லப்பட்ட காய்ச்சல்களில் பாலை உபயோகிக்கலாம். ஜன

ங்களுக்கு உலகினில் வரும் வியாதி பெரும்பாலும் அதாவது 100-க்கு 80-வியாதிகள் சாமானியமாதலால் இவ்விதிகளை சற்று மீறிநடந்தாலும் பாதகம் விளைவதில்லை. அதைக் கொண்டே வியாதிக்கு ஏற்றதென நிர்ணயித்தல் அவிவேகமே. ஆங்கில முறையில் சோடா நீரையும் பாலையும் கலந்து ஆகாரமாகக்கொள்ள விதிக்கப்படுகின்றது. பாலில் உப்பு சம்பந்தப்படின் அது சரீரத்திற்கேற்காத விஷமாகின்றதென சுதேசநூல்களின் அபிப்பிராயம். சிலசமயங்களில் சோடாநீரில் பாலைக் கலந்தவுடன் அது கட்டி கட்டியாக திரிந்துவிடுவதை பார்த்திருக்கிறோம். சில சமயங்களில உடனே அது கெடாவிட்டாலும் ஆகாரக்குடலில் சென்றவுடன் குடலின்தோஷமும் சகாயமாகச்சேர்ந்து தக்ஷணமே கெடுகின்றது. ஆனால் அது ஒரு பெரியவிஷமாகவில்லாத காரணத்தால் உடனே வேறு துர்குணத்தை காட்டுவதில்லை. அவ்வித பால் ஆகாரத்தால் வயிற்றில் ஓர்வித சகிக்கக்கூடியவேதனை உண்டாவதை நிதானிக்கலாம்.

புதுக்காய்ச்சலில் பேதிக்கு மருந்து.

காய்ச்சலில் ஆமநிலைமையில் பேதிக்குகொடுக்கலாமா ? ஆரம்பத்தில் மலபந்தம் இருப்பதாக நிச்சயம் தெரிந்தாலுங்கூட காய்ச்சல் குடிலமில்லையென அறிந்தே விரேசன மருந்தை உபயோகிக்க வேண்டும்.

"பாயயேத் தோஷஹரணம் மோஹாதாமஜ்வரேதுய:
பிரசுப்தம் கிருஷ்ணசர்பம் ஸ:கராக்ரேண பராமிருசேத்"

ஆமசுரங்களில் அறிவின்மையால் மலபந்தத்தை பிரதானமாக நினைத்து விரேசன மருந்தை உபயோகிக்கும் வைத்தியன் பூமாலையென மதிமயங்கி தன் பாட்டில் தூங்கும் கிருஷ்ண சர்ப்பத்தை துணிக்கையால் தட்டிய அறிவிலிக்கு ஒப்பாவான். பின் சொல்லிய விதம் சாதாரணக்காய்ச்சல்களில் இதன் ஆபத்து நன்கு புலப்படாவிடினும் குடில சுரங்களில் விபரீதத்தை விளைவிக்கும். தவிர அந்நிலைமையில் கொடுக்கும் பேதிமருந்து சரியாக வேலைசெய்வதும் கிடையாது. ஆகாரங்களை உட்கொண்ட தக்ஷணத்தில் காய்ச்சல் வந்துவிடின் அவ்வாஹாரங்களை வெளிப்படுத்த வாந்தி மருந்தை உபயோகிக்கலாம். அல்லது வாந்தி எடுக்கவேண்டிய லக்ஷணங்கள் (அதாவது வயிற்றுப்பிரட்டல் வயிற்றுசங்கடம் ஓக்காளம் இவை முதலியவைகள்) பலமாக இருந்து வாந்தி எடுத்தே தீரவேண்டிய நிலைமை ஏற்படின் அப்பொழுது வாந்தி மருந்தை உபயோகிக்கலாம்.

வாந்தி மருந்து.

பிரதிதினம் சாப்பாட்டில் உபயோகப்படும்

பொடி செய்த கடுகு	தோலா $1\frac{1}{4}$
பொடிசெய்த இந்துப்பு	தோலா $\frac{1}{4}$
வெந்நீர்	படி $\frac{1}{4}$

மேற்படி வெந்நீரில் இரண்டு பொடிகளையும் போட்டு கலக்கி ஒரேதடவையில் உட்கொள்ளவேண்டும். வாந்தி அதிகரிக்கவேண்டுமானால் ஒரு டம்ளர் சுடுஜலம் உபயோகிக்கவும். மருந்து உட்கொண்ட 10-நிமிஷத்தில் வாந்தி உண்டாகும். இது எல்லாரும் சுலபமாக செய்யக்கூடியது. மருந்து சரக்குகளும் சுலபமாக எங்கும் கிடைக்கக்கூடியது. இன்னும் அனேகமருந்துகள் இதற்காக சொல்லப்பட்டிருக்கின்றன.

பொடிசெய்த கடுகுத்தூள்	தோலா $1\frac{1}{4}$
பொடிசெய்த மயில்துத்தம் $2\frac{1}{2}$-குன்றிமணிமுதல் 5-குன்றிமணி இடைவரை	
வெந்நீர்	ஒரு டம்ளர்

முன்சொல்லியவிதமே உபயோகிக்கவும்.

இவ்விதம் அவசியமுள்ளவர்களுக்கு வாந்திமருந்தை உபயோகிக்கவேண்டும். பிறகு நோயாளியின் பலத்தையும் வியாதியின் பலத்தையும் அனுசரித்து ஒரு நாளோ அல்லது பலநாட்களோ உபவாசம்செய்யவேண்டும். இவ்விஷயம் ஆரம்பத்திலேயே சொல்லப்பட்டிருக்கின்றது. பிறகு உடம்பில் வலி, பிடிப்பு முதலியவைகள் தோன்றில் ஸ்வேதம் (steam bath) செய்யவேண்டும். அது செய்யும் விதமாவது.

ஓர் வாய்குறுகிய பாத்திரத்தில் முக்காலளவு ஜலம் கொதிக்க வைத்து ஒரு கயிற்று கட்டில் அல்லது வலை பின்னலுள்ள பிரம்பு நாற்காலியில் (கயிற்றுகட்டிலில் படுக்கவைப்பதே நலம்) நோயாளியை இருத்தி பாத்திரத்தை கட்டில் அல்லது நாற்காலி அடியில் வைத்து அதிலிருந்துவரும் ஆவி முழுவதும் நோயாளி சரீரத்தில் படும்படி செய்யவேண்டும். நாற்காலி அல்லது கட்டில் முழுவதையும் கம்பளியால் மூடவும். நோயாளிக்கும் சிரசுநீங்கலாக முழு சரீரத்தையும்மூடிவிடவேணும். அப்படி செய்வதால் கட்டிலின் கீழிருந்துவரும் ஆவி சிதறாமல் அப்படியே தங்கிநின்று நோயாளி சரீரம் முழுவதும் வியாபித்து மிகுந்த வியர்வையை யுண்டுபண்ணும்.

உபவாசம்செய்தபிறகு நோயாளிக்கு உபயோகிக்கும் ஆகாரம் கஞ்சி. கஞ்சி தயார் செய்யும் விதம்.

அரிசிக்கு 18-பங்கு சுத்தஜலம் விட்டு நன்றாக வேகவைத்து கொஞ்சம் உப்பும் சுக்கும் சேர்த்துக்கொண்டு அந்த தெளிவை உபயோகிக்கவேண்டும். இவ்விதம் தயார்செய்யும் அரிசி புழுங்கல் அரிசியாகவிருக்கவேண்டுமென்று சிலர் சொல்லுவதுண்டு. அவைகள் சாஸ்திரமுறைக் கேற்றதல்ல. ஆனால் ஒரு வருஷம் பழகிய புழுங்கலரிசியை உபயோகிப்பதில் விரோதமில்லை. புது அரிசியை உபயோகிப்பதால் நீரிழிவு (diabetes) வியாதி உண்டாகுமென்பதும், காய்ச்சலில்செய்யும் சுவல்பஅபத்தியத்தால் மேற்சொன்ன வியாதி உண்டாகுமென்பதும், நமது சாஸ்திரக்கொள்கை.

இவ்விதம் சுரம் ஆரம்பித்ததினத்திலிருந்து ஏழுநாள் செய்து வரவேண்டும். இக்காலங்களில் தாகத்திற்கு அருந்தவேண்டிய பானமும் ஏற்கனவே சொல்லப்பட்டிருக்கின்றது. இக்காலங்களில் சுரஸம், கஷாயம் போன்ற மூலிகை மருந்துகள் கொடுக்கக் கூடாது. ஆதலால் இக்காலங்களில் பஸ்ம சிந்தூரங்களை உபயோகிக்கவேண்டியது. காய்ச்சல் ஆரம்பித்ததினத்திலிருந்து ஏழுநாள் வரை மூலிகை மருந்துகளை கொடுக்கக்கூடாதென்ற வசனத்தைக் கொண்டு சில வைத்தியர் ஒருசிகிச்சையும் செய்யாதுவிடுகின்றனர். சுரங்களில் அதிலும் தற்காலம்வரும் சுரங்களில் ஒரு நிமிஷம் சிகிச்சைசெய்யாவிடில் மிகுந்த ஆபத்து விளைந்துவிடும். ஆகையால் ஆமநிலைமையில் மூலிகை சிகிச்சையை விடுத்து தெய்வ சிகிச்சையென்கிற பஸ்ம சிந்தூர சிகிச்சையை செய்யவேண்டும். அவற்றுள் சுலபமாகவும் பிரத்யக்ஷத்தில் கைகண்டதுமான சில மருந்துகளை எழுதுகிறோம்.

1. மிருத்யுஞ்ஜய ரசம் :—

உலாந்துலிங்கம்	தோலா	2	(தோலாஎன்பது தற்கால ரூபாயில் ஒருரூபாயிடை)
பொரித்த எண்ணெ			
வெண்காரம்	தோலா	1	
கந்தகம்	தோலா	1	
மிளகு	தோலா	1	
அரிசிதிப்பிலி	தோலா	1	
நாவிக்கிழங்கு	தோலா	1	

செய்முறை :—உலாந்துலிங்கம் கடையில்கிடைக்கும் சரக்கு. அதை கட்டியாக வாங்கிவந்து ஒரு பீங்கானில் போட்டு எலுமிச்

சம்பழ ரசத்தால் முழுகும்படிசெய்து வாய்மூடி மூன்றுநாள் வைத்திருந்தால் சுத்தியாகும். இவ்விதம் சுத்திசெய்து எடுத்துக்கொள்ளவேண்டும். கந்தகமென்பது கடைச்சரக்கு. அதை சுத்தி செய்யும் விதம். ஒரு சட்டியில் சல்லடைக்கண்கள்போல அடியில் துவாரம்விட்டு அந்த துவாரமுள்ள சட்டியை பால்நிறைந்த ஒரு சட்டியின்மேல்வைத்து வாய்க்கு சீலைமண்செய்து ஓட்டையுள்ள சட்டிக்குள் வேண்டியவளவு கந்தகத்தை நிரப்பிவைத்து அந்த சட்டியின் வாயில் ஒரு அகலை கவிழ்த்து மூடி வாய்க்கு சீலைமண் செய்து அடிசட்டி மறையும்படி பூமியில் புதைத்து மேல் சட்டியை ஒட்டி நாலுபக்கத்திலும் சுமார் 5 அல்லது 6 சாணி முட்டைகளை வைத்து அடுக்கி நெருப்புவைத்து முட்டைகள் முழுவதும் வெந்து சாம்பலாகி ஆறியவுடன் பூமியை நாலுபக்கத்திலும் பறித்து மெதுவாக எடுத்து மேல் சட்டியை அப்புறப்படுத்தி பாலுள்ள அடி சட்டியைப்பார்த்தால் அதன் அடியில் கந்தகம் உருகி மணியாக இருக்கும் அதை எடுத்து ஜலத்தில் அலம்பி காயவைத்துக்கொள்ளவும். நாலு பக்கத்திலும் போடும் நெருப்பால் உள்ளிருக்கும் கந்தகம் உருகி மணியாக சல்லடைக்கண்கள் போன்ற ஓட்டைவழியாக பால்சட்டியில் இறங்கி அக்குளிர்ந்தபாலில் (பசும்பாலில்) சம்பந்தித்து கெட்டியாகின்றது. இவ்விதம் சுத்திசெய்து வாடிக்கையில்லாதவர்கள் ஆரம்ப காலத்தில் சரிவர நெருப்பு நாலுபக்கங்களிலும் படும்படி செய்யத்தவறுவதால் உருகி விழாத கந்தகக்கட்டிகள் மேல் சட்டியிலேயே நின்றுவிடுவதுமுண்டு. அதை மறுபடியும் அதே விதமாக சுத்திசெய்து எடுத்துக்கொள்ளலாம். கீழ் சட்டியிலிருக்கும் பால் காய்ச்சாத பச்சைப்பாலாகயிருக்கவேண்டும். அதே தினத்தில் அந்த பாலை மறுபடியும் மேற்படி கந்தகசுத்திக்கு பலதடவை கூட உபயோகிக்கலாம். இந்த முறை கஷ்டமென்று நினைப்பவர்களுக்கு சற்று சுலபமாக மற்றொருமுறை சொல்லுகின்றோம். அதாவது தேவையான கந்தகத்தை எடுத்து குழியமி என்கிற கல்வத்திலிட்டு தண்ணீர்விட்டான் கிழங்கு ரசத்தைவிட்டு அரைமணி நேரம் அரைத்து வெய்யிலில் உலர்த்தி எடுத்துவைத்துக்கொள்ளலாம். கந்தகத்தில் பலபேதங்களுண்டு. குழாய் கந்தகம் என்ற வகுப்பு மிகவும் இளப்பம். ஆகையால் அது நீங்கலாக மற்றவை நல்லது. வத்ஸநாபி என்பது எல்லா இடங்களிலும் உண்டாகக் கூடியது. அது ஓர் பூண்டின் கிழங்கு. அதில் வெண்நாபி என்றும் கருநாபி என்றும் இருவகையுண்டு. இரண்டுவகையும் கடையில் கிடைக்கும். இது ஓர்வித விஷ கிழங்கு. அதன்சுத்தியாவது:-

வத்சநாபி கிழங்கை தேவையான மட்டில் எடுத்து சிறு துண்டங்களாக நறுக்கி ஓர் பீங்கானில்போட்டு அது முழுகும்படி கோமூத்திரம்விட்டு ஏழுநாள் வைத்திருக்கவும். நடுவில் கோமூத்திரம் குறைந்தால் மறுபடியும் புதிய கோமூத்திரம் ஊற்றிவைக்கவும். ஏழுநாள் கழிந்தபிறகு அதை சுத்த ஜலத்தில் கழுவி நல்ல கடும் வெய்யிலில் காயவைத்துக்கொள்ளவும். வெண்காரமும் கடைசரக்கு. அதில் எண்ணெவெங்காரமென்னும் தினுசை வாங்கி ஓர் வாணயில்போட்டு நெருப்புத்தணலில் வைத்தால் அது மலர்ந்து பொரியும். அதை எடுத்துவைத்துக்கொள்ளவும்.

இவ்விதம் சுத்திசெய்த சரக்குகளையும் மற்ற சரக்குகளையும் அந்தந்த நிறைப்படி எடுத்துக்கொண்டு கல்வத்திில்போட்டு நன்றாக அரைக்கவேண்டும். கொஞ்சமும் கப்பியில்லாமல் நன்றாக பொடியானபிறகு சீசாவில் எடுத்து அடைத்துவைத்துக்கொள்ளவும்.

குறிப்பு :—எல்லாவற்றையும் ஒன்றாகச்சேர்த்து அரைப்பது கடினம். முதலில் வத்ஸநாபியை அரைத்துக்கொள்ளவும். திப்பிலிமிளகு என்ற கடை சரக்குகளை தனியாக உரலிலிடித்து வஸ்திரகாயம்செய்து பொடியை எடுத்துக்கொள்ளவும். பிறகு லிங்கத்தை நாபிபொடியுடன் கூட்டி யரைக்கவும். லிங்கம் நன்றாக பொடியாகி கலக்கவேண்டியது அவசியம். பிறகு அப்பொடிகளுடன் கந்தகத்தை சேர்த்தரைக்கவும். பிறகு வெண்காரத்தைசேர்த்து அரைத்து அதற்குபிறகு வஸ்திரகாயஞ்செய்த பொடிகளைப் போட்டு அரைக்கவும். இப்படி செய்தால்தான் மருந்து சரிவர ஒன்றுசேரும்.

குணம் :—இம்மருந்தை ஒருவயதுகுழந்தைமுதல் பெரியோர் வரையில் கொடுக்கலாம். எத்தனைநாள் உபயோகித்தாலும் சரீரத்திற்கு யாதொரு தொந்திரவும் கொடுப்பதில்லை. எவ்வகை காய்ச்சல்களிலும், சன்னிபாதங்களிலும் typhoid என்ற சந்தத சுரத்திலும் சந்தேகமின்றிகொடுக்கலாம். இம்மருந்தும் இதுபோன்ற மற்ற மருந்துகளும் காய்ச்சலில் எந்நிலைமையிலும் கொடுக்கலாம். சிலநிலைமைகளில் மூலிகைகளை உபயோகிக்கக்கூடாதென தடுத்திருந்தாலும் எந்த நிலைமையிலும் இதுபோன்ற மருந்துகளுக்கு விலக்கில்லை. ஆங்கிலத்தில் Phenaction பெனசிடின் முதலிய சுர மருந்துகளின் உபயோகத்தால் ஹிருதயம் குன்றுவது (Heart depression) போன்ற தொந்திரவு இதில்கிடையாது. இதில் மாத்திரமின்றி மற்ற எந்த சுதேச மருந்துகளிலுமே இவ்வித தொந்திரவு கிடையாது.

அளவு:—அரை [illegible] முதல் நான்கு குன்றுமணியிடை வரை வயதுக்குத்தக்கவிதமாக உபயோகிக்கலாம்.

அனுபானம் :— மேற்சொன்ன அளவுப்படி எடுத்து ஒரு வெற்றிலையில்போட்டு தேன்விட்டுகுழைத்து நாக்கில் தடவவேண்டும். அரைரூபாயிடை இஞ்சியைத் தட்டி நீராக ரசம் எடுத்து (அரை அவுன்சு அளவு) அதை சுடும் கரண்டியில்போட்டு முறித்து மேற்படி சிந்தூரம் சாப்பிட்டவுடன் சாப்பிடவும். இவ்விதம் தினம் காலை 6-மணிக்கும், மாலை 6 மணிக்கும் உபயோகிக்கவும்.

இன்னும் மேலே சொல்லப்போகும் இதுபோன்ற ரசமருந்துகள் முழுவதும் அவ்விடம் சொல்லும் கிரமப்படி, இதற்கும் உபயோகிக்கலாம். *

சுரம்ஆரம்பித்த எட்டாவதுநாளில் சுரம் ஆமநிலைமையிலேயேயிருப்பின் அப்பொழுது பாசன மருந்துகளை உபயோகிக்கவும். ஆமநிலைமை கடந்திருப்பின் அப்பொழுது சமன மருந்துகளை உபயோகிக்கவேண்டும். ஆம நிலைமையிலும் பச்யமான நிலைமையிலும் பக்வ நிலைமையிலும் சுரம் வீசிக்கொண்டேயிருக்கும். மின்சொல்லிய குறிகளால் நிலைமையை யுணர்ந்து ஆமநிலைமை அல்லது பச்யமான நிலைமையிருந்தால் அப்பொழுது சுரம் பக்வமாகும்படிசெய்யவேண்டும். சுரம் ஆரம்பித்ததினத்திலிருந்து ஏழாவது நாளில் இயற்கையாலும் அந்நிலைமை மாறலாம். அல்லது மின்சொல்லியபடி (1) உபவாசம் (2) ஸ்வேதம் (steam bath) (3) கஞ்சி (4) குடிநீர் இந்நான்கு வழிகளில் ஒன்று இரண்டை அனுஷ்டித்தோ அல்லது நாலையும் அனுஷ்டித்தோ அவ்வாமநிலைமை மாறலாம். முதல் ஏழு நாள்களில் இவைகளை அனுஷ்டித்தும் பலனிராவிடில் அப்பொழுது அந்நிலைமை மாற பாசனமருந்துகளை உபயோகிக்கவேண்டும்.

வாதசுரத்தில் பாசன மருந்துகளாவன.

சீந்தில்கொடி, தேசாவரம், சுக்கு இந்த மூன்று சரக்குகளையும் சம இடையாக இடித்து பொடிசெய்து கஷாயம் செய்துகொண்டு பகலில் இரண்டு அல்லது மூன்றுதடவை கொடுக்கலாம்.

கஷாயம் போடும்விதம்.

பொடிசெய்த மருந்து சரக்குகளில் நான்கு தோலா பொடியை எடுத்து ஒரு மண் சட்டியில் போட்டு 64-ரூபாய் இடையுள்ள

படியில் (தற்காலம் வழங்கும் சர்க்கார் படி 100-ரூபாயிடை யாத லால் இந்த படியை எடுத்துக்கொள்ளலாம்) ஒரு படி ஜலம் விட்டு அடுப்பேற்றி மெதுவாக தீயிட்டு கால்படியாக வற்றவைத்து வடி கட்டி ஒரேவேளையில் சாப்பிடவேண்டும். நல்ல வயதுவந்த வாலி பர்களுக்கு இந்த அளவு. நடுத்தர பலமுள்ளவர்களுக்கு மூன்று தோலாபொடியில் அதற்கேற்றவாறு முக்கால்படி சுத்தஜலம்விட்டு நாலில் ஒருபங்காக வற்றவைத்து மின்போல உபயோகிக்கவும். ஹீனபலமுள்ளவர்களுக்கு இரண்டுதோலா பொடியில் அரைப்படி ஜலம் விட்டு நாலி லொன்றாக காய்ச்சி மின்போல உபயோகிக்க வேண்டியது. இது சாஸ்திரிய முறை. ஆனால் காசி முதலிய பலதேசங்களில் பெரியோர்கள் இக்காலத்திற்கேற்றவாறு இவ்வி தியை மாற்றி அநுஷ்டிப்பதாலும் விவாதமின்றி வெகு காலமாக அப்படியே நடந்துவருவதாலும் அடியில்கண்டவிதமே கிஷாயம் செய்து கொடுக்கவேண்டும். இவ்விதி இதற்கு மாத்திரமின்றி எல்லாவித கிஷாயங்களுக்கும் பொருந்தியதே. இனிவரும் இடங் களிலும் இவ்விதமே செய்துகொள்ளவேண்டும்.

தத்காலம் கிஷாயம் உபயோகிக்கும் விதம்.

கிஷாய சரக்குகளின் பொடியில் இரண்டுதோலா எடுத்து அரைப்படி சுத்த ஜலத்தில்போட்டு நாலில் ஒன்றாக சுண்டவைத் துக்கொண்டு மின்போல உபயோகிக்கவேண்டும். இப்படியே அந் தந்த வேளைக்கு புதிதாக தயார்செய்துகொள்வதே நலம். பனி ரெண்டுமணிக்குமேல் வைத்திருந்த கிஷாயத்தை உபயோகிக்கக் கூடாது. பனிரெண்டு மணிக்குள் இரண்டு அல்லது அதிகதடவை கிஷாயம் உபயோகிக்கவேண்டிவரும் சமயங்களில் தடவைகளுக்கு தக்கவளவு கிஷாயத்தை ஒரேதடவையாக செய்துகொண்டு வடி கட்டி சீசாவில் வைத்துக்கொண்டு அந்தந்த வேளையில் அளவுபிர காரம் உபயோகிக்கலாம். பாசநம் சமனம் என்ற இருவகை குடி கிஷாயங்களுக்கும் இதுதான்விதி. தைலம், நெய் இவைகளில் உப யோகிக்கப்படும் கிஷாயங்களுக்கு விதி வேறு. அந்தந்த சந்தர்ப் பங்களில் அது சொல்லப்படும்.

குறிப்பு :— சீந்திற்தண்டு மூன்றுவிரல் பெருமனுள்ளதாக விருக்கவேண்டும். தழையை விலக்கி தண்டை மாத்திரம் எடுத் துக்கொள்ளவேண்டும்.

வாதசுரத்தில் பாசன கிஷாயம் :—

சிறுகாஞ்சொறிவேர், சீந்தில்தண்டு, கோரைக்கிழங்கு, சுக்கு இவைகளை சமன் இடையாகப் பொடிசெய்து மின்போல கிஷாயம் செய்து பகலில் இரண்டு அல்லது மூன்றுவேளை (நான்குமணிக்கு ஒருதடவை) உபயோகிக்கலாம்.

பித்தசுரத்தில் பாசன கிஷாயம் :—

வெப்பாலையரிசி, கோரைக்கிழங்கு, கடுகுரோகிணி, இவை களை சமன் இடையாக பொடிசெய்து கிஷாயம்செய்து பகலில் மின்போல இரண்டு அல்லது மூன்றுவேளை கொடுக்கலாம். ஷை கிஷாயத்தில் கால் ரூபாயிடை தேன்விட்டுக்கொள்ளவும்.

பித்தசுரத்தில் பாசன கிஷாயம் :—

கோரைக்கிழங்கு, பர்பாடகம், நிலவேம்பு, சிறுகாஞ்சொறி, இவைகளை கிஷாயம்செய்து மின்போல கொடுக்கவும்.

கபசுரத்தில் பாசன கிஷாயம் :—

ஆடாதோடையிலை கோரைக்கிழங்கு, சுக்கு, சிறுகாஞ் சொறி, இவைகளை கிஷாயம்செய்து மின்போல கொடுக்கவும்.

வாதபித்தம், வாதசிலேஷ்மம், முதலிய சுரங்களில் மேலே சொன்ன அதனதன் கிஷாயங்களை ஒன்று சேர்த்துதரவேண்டும். மின்சொன்ன பாசன கிஷாயங்களைக்கொடுத்து ஆமநிலை கடந்த வுடன் அடியில் காணும் சமன மருந்துகளை உபயோகிக்கவேண்டும். வியாதியைத் தணிக்கும் மருந்துகளுக்கு சமனமருந்துகளெனப் பெயர்.

வாதசுரத்தில் சமனகிஷாயங்கள் :—

(1) நன்னாரிவேர், திராக்ஷைப்பழம், சதகுப்பை, அரிசி திப் பிலி, அசேறுகம், (அசேறுகமென்பது மிளகைப்போன்ற ஒரு கடைச்சரக்கு. திருச்சியில் கிடைக்கும்) இவைகளை கிஷாயம் மின்போல செய்து தினம் மூன்று வேளை உபயோகிக்கவும். இம் மருந்துகளில் வெல்லம் ஒருதோலா சேர்த்து தரவேண்டுமென்று சாஸ்திரங்களில் கூறியபோதிலும் பெரியோர்கள் சம்பிரதாயத் தில் விலக்கப்பட்டிருப்பதால் இங்கும் சொல்லவில்லை. இவ்விதமே இனியும் சம்பிரதாயத்தையொட்டியே நாம் மருந்துகளை சொல்லு கிறோமானதால் கிரந்தத்தில் இருப்பதுபோல அப்படியே காணப்ப டாது. சுதேச வைத்தியமுறைகள் ஆசான்மூலமாக அறியவேண்

டுமேயொழிய தானாக புஸ்தகத்தைப்பார்த்து மருந்துசெய்யக்கூடா தென்பது இதனால் விளங்கும். பலஇடங்களில் புஸ்தகத்தில் ஒரு மாதிரியாகவும் அனுஷ்டானம் ஒரு மாதிரியாகவுமிருக்கின்றது. நாம் எழுதும் முறைகள் முழுவதும் அனுஷ்டானத்தை ஒட்டியே யிருக்கும்.

(2) வெள்ளை சாரடைவேர் (சாரணத்தியென்று மதுரை பக்கங்களில் வழங்கும்) சதகுப்பை, திராக்ஷை, நன்னாரிவேர், சீந்தில் இவைகளையும் மின்போலவே உபயோகிக்கவும்.

(3) தண்ணீர்விட்டான்கிழங்கு, சீந்தில் இவைகளை தனித் தனியாக இடித்து வடிகட்டின ரசம் தனித்தனியாக அரை அவு ன்சு எடுத்து ஒன்றுசேர்த்து ஒரு அவுன்சு உபயோகிக்கவும். தினம் மூன்றுவேளை உபயோகிக்கலாம்.

பித்த சுரத்தில் சமனகிஷாயங்கள் :—

(1) நிலவேம்பு, கடுகுரோகிணி, கோரைக்கிழங்கு, பர் பாடகம், சீந்தில், பேப்புடல், வேப்பம்பட்டை, மஞ்சள், இவை களை கிஷாயம் செய்து பகலில் இரண்டு அல்லது மூன்று தடவை கொடுக்கவும்.

குறிப்பு :— 100 வருஷத்திய வேம்பு நல்லது. கிடைக்காவி ட்டால் கூடியமட்டில் வயதுசென்ற மரத்தின் பட்டையில் மேல் உலர்ந்த பாகத்தைத் தள்ளி உள்சதையை எடுத்துக்கொள்ளவும். மஞ்சள்—விரளிமஞ்சளை எடுத்துக்கொள்ளவும்.

(2) ஆடாதோடை, சிறுகாஞ்சொரிவேர், சிவதைவேர், பர்பாடகம், கடுகுரோகிணி, நிலவேம்பு, இவைகளின் கிஷாயத்தில் சர்க்கரை ஒரு தோலாபோட்டு தினம் 2-வேளைகொடுக்கவும்.

குறிப்பு :— இந்த கிஷாயம் பித்தசுரத்தில் காணும் சகிக்க வொண்ணாத உடம்பு எரிச்சல், தாகம், மூர்ச்சை, தலைசுற்றல், இவை களை நீக்கும். தவிர இக்கிஷாயம் மல பிரவர்த்தியையும் செய்யும். பித்த சுரங்களில் உபயோகிக்கப்படும் எல்லாவித மருந்துகளும் அனேகமாக மலபிரவர்த்தியை சரிபண்ணக்கூடியவைகளாகவே யிருக்கின்றன. விரேசன மருந்தை கொடுக்கக்கூடாதென சாஸ்தி ரம் விதித்தாலும் இம்மருந்துகள் சுபாவத்தில் விசேஷமாக காய்ச் சலை விலக்கியும் லேசாக மலத்தை கழிக்கக்கூடியவனவாக யிருப்ப தால் இவற்றால் பாதகமில்லை.

(3) திராக்ஷை, கடுக்காய், பர்பாடகம், கோரை கிழங்கு, கடுகுரோகிணி, சரக்கொன்றைபழம், இவைகளின் கஷாயத்தை தினம் இரண்டுவேளை கொடுக்கலாம்.

210146